# மன்னா

“இது என்ன ?”

## MANNA

( “...What is it?” - Exodus. 16:14,15 )



# மன்னா

## ஓர் ஆய்வு

“ பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும்
உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப்
பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது.
இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது
இன்னது என்று அறியாதிருந்து,
ஒருவரை ஒருவர் பார்த்து,

**இது என்ன?**

என்றார்கள்.”

யாத்திராகமம் 16:14 & 15

ஆ! பிரியமான சகோதர சகோதரிகளே!! தற்போது நாம் ஆராயப்போகும் தியானம் மற்றும் பாடமானது எளிமையானதாகவும் இருக்கும், அதேவேளையில் அபூர்வமானதாகவும் இருக்கப்போகிறது!

## ஆதார வசனம் – யாத்திராகமம் 16:14 & 15

**" பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின்மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது. இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்......"**

ஆமாம்! இன்று நாம் ஆராயவிருக்கும் தலைப்பு –

# மன்னா

ஆம், இதைப்பற்றி தான் நாம் ஆராயப்போகிறோம்!

**"...இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம்..."**

என்று மோசே இஸ்ரயேல் ஜனங்களுக்குச் சொன்னது போல!

ஆ! ஆமாம்! மன்னாவைப் பற்றிய முதல் பதிவு அல்லது தோற்றம் எங்கேயுள்ளதெனில்...

**"இஸ்ரவேல் புத்திரர் ஒருவரை ஒருவர் பார்த்து,**

**இது என்ன? என்றார்கள்."**

(என அவர்கள் ஆச்சரியப்பட்டபோது)
என்று நமக்கு வேதாகமம் சொல்கிறது.



துரதிர்ஷ்டவசமாக மொழிபெயர்ப்பாளர்கள் அங்கு ஒரு கேள்விக்குறியை வைக்க மறந்துவிட்டார்கள் போலும்!

ஏனென்றால் உண்மையில் இஸ்ரவேல் புத்திரர் ஒருவரை ஒருவர் பார்த்துச் சொன்னது – "**இது என்ன?**"

மன்னாவிற்கான ஸ்ட்ராங்கின் எபிரெய பதம் – **H # 4478** ஆகும்.

**("ma(w)n" - "man-hu")  [ மான் – மன்–ஹு ]**

அதின் அர்த்தம் யாதெனில் – **இது என்ன?** என்பதாகும்.

அதினால்தான் யாத்திராகமம் 16:15 –இல்

**"...அது இன்னது என்று அறியாதிருந்து..."**

என நாம் வாசிக்கிறோம்.

இப்போது, இந்த மன்னாவைப்பற்றி விளக்கமாகப் பின்வரும் வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.



**யாத்திராகமம் 16:31**

**"இஸ்ரவேல் வம்சத்தார் அதற்கு மன்னா என்று பேரிட்டார்கள்; அது கொத்துமல்லி அளவாயும் வெண்மைநிறமாயும் இருந்தது, அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது."**

ஆமாம்! இந்த மன்னாவானது சிறிய "**விதைகள்**" (தானியங்களின்) அளவாயும், தேன் போன்ற சுவை உடையதாயும் இருந்தது.

இதைப்பற்றிக் கூடுதலான விளக்கம் பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கலாம்.

**எண்ணாகமம் 11:7, 8**

**"அந்த மன்னா கொத்துமல்லி விதையம்மாத்திரமும், அதின் நிறம் முத்துப்போலவும் இருந்தது. ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக்கொண்டுவந்து, ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள்; அதை**

**அப்பங்களுமாகச் சுடுவார்கள்; அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருந்தது."**

ஓ! பிரியமானவர்களே! அது உடனே புசிக்கக்கூடிய உணவாக இருக்கவில்லை!

ஒருவர் அதைப் பல செயல்முறைகளுக்கு உள்ளாக்கின பிற்பாடு தான் சமைக்க வேண்டும்! உதாரணமாக, கோதுமை, ராகி, சோளம், வாற்கோதுமை போன்ற தானியங்களுக்கெல்லாம் செய்யப்படுவது போன்றது தான்.

இது மிகவும் சுவாரஸ்யமாக உள்ளதல்லவா!

மேலும், இந்த மன்னாவைப்பற்றிப் பின்வரும் வசனத்திலும் நாம் வாசிக்கலாம்.

**யாத்திராகமம் 16:21**

**"அதை விடியற்காலந்தோறும் அவரவர் புசிக்கும் அளவுக்குத்தக்கதாகச் சேர்த்தார்கள், வெயில் ஏறஏற அது உருகிப்போம்."**



ஆ! ஆமாம்! வானத்திலிருந்து பனி பெய்தபோது உருவான இந்த "**விதைகளானது**" சூரியனின் வெப்பம் ஏறஏற உருகிப்போனது!

மேலும், இந்த மன்னாவைப்பற்றி இன்னும் அதிகமாக பின்வரும் வசனத்தில் நாம் வாசிக்கிறோம் –

## சங்கீதம் 78:25

**"தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்; அவர்களுக்கு ஆகாரத்தைப் பூரணமாய் அனுப்பினார்."**

ஆ! ஆமாம்! நாம் வாசிக்கும் இந்த மன்னா இந்த **"விதைகள்"** உண்மையில் தேவதூதர்களின் உணவாகும்!
ஆக, இஸ்ரயேல் தேசத்தார் வனாந்தரப் பிரயாணத்தின் ஊடாக வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட கானான் தேசத்திற்கு வரும்வரை... இந்த **"வானத்திலிருந்து வந்த அப்பத்தை"** தான் தேவன் உணவாக அவர்களுக்குப் புசிக்கவும், ஜீவிக்க ஆதாரமாகவும் வழங்கியுள்ளதைக் காண்கின்றோம்.

சரி, மன்னாவினுடைய இந்த வழங்குதலின் ஏற்பாடு எப்போது நிறுத்தப்பட்டது? என்பதுபற்றி நாம் வாசிக்கலாம் –

## யோசுவா 5:12

**"அவர்கள் தேசத்தின் தானியத்திலே புசித்த மறுநாளிலே மன்னா பெய்யாமல் ஒழிந்தது; அதுமுதல் இஸ்ரவேல் புத்திரருக்கு மன்னா இல்லாமற்போய், அவர்கள் கானான் தேசத்துப் பலனை அந்த வருஷத்தில்தானே புசித்தார்கள்."**

மேலும், இதைப்பற்றி **யாத்திராகமம் 16:35** –லும் காணப்படுகிறது, அதையும் வாசிப்போம் –

**"இஸ்ரவேல் புத்திரர் குடியிருப்பான தேசத்துக்கு வருமட்டும் நாற்பது வருஷமளவும் மன்னாவைப் புசித்தார்கள்; அவர்கள் கானான் தேசத்தின் எல்லையில் சேரும் வரைக்கும் மன்னாவைப் புசித்தார்கள்."**

ஆம், பிரியமானவர்களே! இது அவர்கள் வனாந்தரத்தில் **"நாற்பது வருஷங்கள்"** நிறைவு செய்த பிற்பாடு ... கானான் தேசத்திற்குள்ளாக நுழையும்போது நிகழ்ந்தது... அவர்கள் உள் நுழைந்தபோது அவர்கள் எரிகோவின் சமனான வெளிகளிலே **"பதினான்காம் நாள்"** அனுசரிக்கப்படும் பஸ்கா பண்டிகையாக இருந்தது.

## யோசுவா 5:10

**"இஸ்ரவேல் புத்திரர் கில்காலிலே பாளயமிறங்கியிருந்து, மாதத்தின் பதினாலாம் தேதி அந்திநேரத்திலே எரிகோவின் சமனான வெளிகளிலே பஸ்காவை ஆசரித்தார்கள்."**

வெகு காலத்திற்கு முன்பே, அதாவது ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவதற்கு முன்பே, ஒரு கலசத்தில் ஓர் **" ஓமர் "** அளவிற்குச் சேகரித்து வைக்க மோசே இஸ்ரவேல் புத்திரருக்கு ஆரம்பத்திலேயே அறிவுறுத்தியிருந்த மன்னாவும் இருந்தது.

**யாத்திராகமம் 16:34**

**"....காக்கப்படும்படி ஆரோன் அதைச் சாட்சி சந்நிதியில் வைத்தான்...."**

ஆமாம்! இந்த மன்னா இறுதியாக **" உடன்படிக்கைப் பெட்டியில் "** வைக்கப்பட்டிருந்தது, மேலும், இதைப்பற்றி அப்போஸ்தலர் பவுல் பின்வரும் வசனத்தில் விவரிப்பதைக் காண்கிறோம் .

**எபிரெயர் 9:4**

**"அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன. "**



இந்த மன்னா ஒருபோதும் கெட்டுப்போகாமல் இருந்தது !

வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில், நமது எஜமானராகிய கர்த்தர் இந்த மன்னாவை ... **" மறைவான மன்னா "** எனக் குறிப்பிடுகிறார் ...

**வெளிப்படுத்தல் 2:17**

**" ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது."**

பிரியமானவர்களே !! வேதாகமத்தின் சத்தியத்தில் , **"மறைவான மன்னா "**–

**இதன் இரகசியம் தான் என்ன ?**

இதைப் புரிந்துக்கொள்ள நாம் இந்த மன்னாவைப் பற்றிய ஆய்வுப்பாடத்தை ஆவிக்குரிய பார்வையில் ஆராய வேண்டியிருக்கிறது, வாசிக்கலாம் –

**ரோமர் 15:4**

**"தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது."**

பிரியமானவர்களே! இங்கே மன்னாவின் இந்த விஷயத்தில் நம்முடைய கற்றலுக்கு என்ன இருக்கிறது என ஆராய்ந்து பார்க்கலாம். நாம் இந்த ஆராய்ச்சியை ஏழுவிதமான விவரங்கள் மற்றும் பார்வைகளின் மூலமாக புரிந்துக்கொள்ளப்போகிறோம்.

## 1. "மன்னாவைப்பற்றிய" துவக்கம் – அது எவ்வாறு கொடுக்கப்பட்டது!

**(The Beginning of Manna - How it was given!)**

அதைப்பற்றி இவ்வாய்வுப் பாடத்திற்கான ஆதார வசனத்தில் நாம் வாசிக்கலாம் –

**யாத்திராகமம் 16:14,15**

**"பெய்திருந்த பனி நீங்கினபின், இதோ, வனாந்தரத்தின் மீதெங்கும் உருட்சியான ஒரு சிறிய வஸ்து உறைந்த பனிக்கட்டிப் பொடியத்தனையாய்த் தரையின் மேல் கிடந்தது. இஸ்ரவேல் புத்திரர் அதைக் கண்டு, அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: இது கர்த்தர் உங்களுக்குப் புசிக்கக்கொடுத்த அப்பம்."**

இது தேவன் முதன்முதலில் வானத்திலிருந்து "**மன்னாவை**" அனுப்பியதன் "**நேரடியான**" விளக்கமாகும். அப்படியெனில், இந்த மன்னாவின் "**ஆவிக்குரிய முக்கியத்துவம்**" என்னவாக இருக்கும் என்பதை நாம் ஆராயும்போது, அதைப்பற்றி நம்முடைய "**கர்த்தரின் வார்த்தைகளுக்கே**" சென்று பார்க்கலாம் –

**யோவான் 6:32, 33**

**"இயேசு அவர்களை நோக்கி: வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்."**

இந்த வசனத்திற்கான விவிலிய கருத்துக்களில் (ஈ.பி.சி / **E.B.C**) பக்கம் 501 – இல் நாம் இவ்வாறு வாசிக்கிறோம் –

**"...வனாந்தரத்தில் கொடுக்கப்பட்ட மன்னாவானது, உண்மையான மன்னாவை, நித்திய ஜீவனளிக்கும் மெய்யான அப்பமாகிய அவரையும் மற்றும் அவர் அறிவித்த சத்தியத்தையும் அடையாளப்படுத்துகிறது**.... "
**(R2651:5 / R5279:4)**

ஆமாம், "**மன்னா**" என்பது "**வானத்திலிருந்து இறங்கி வந்த அப்பமே**", அதாவது, இது, மனுகுலத்திற்கான மெய்யான ஜீவ ஆதாரத்தின்/ஜீவாதாரத்தின் அடையாளமாக இருக்கிறது.

எப்படிப்பட்ட ஜீவன்?

**மெய்யான மற்றும் நித்தியமான ஜீவனாம் !!!**

ஆக, தாமே அந்த "**மன்னா** " என எஜமான் குறிப்பிடும் அதேவேளையில்...., "**தேவனுடைய வார்த்தையை,**" " **ஜீவ அப்பம்** " எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

**லூக்கா 4:4**

**"அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்."**

பிரியமானவர்களே! இந்த ஆராய்ச்சியில், நாம் "**வானத்திலிருந்து வந்த அப்பமான**" மன்னாவை "**தேவ வார்த்தை**" ஆகப் பார்க்கவுள்ளோம். அதே சமயம், நம்முடைய கர்த்தராகிய இயேசுவும் "**தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தை**" ஆக உள்ளார் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

ஆக, இந்தக் கண்ணோட்டத்தில், மன்னாவை வழங்குவதற்கான அவரது துவக்கத்தையும் அங்குள்ள விவரங்களையும் பார்க்கும்போது, இது எதை விவரிக்கிறது என நாம் ஆலோசனையாகக் கூறுவது யாதெனில், இது ஆதியில்

முற்பிதாக்களின் யுகத்திலும் யூத யுகத்திலும்... தீர்க்கதரிசிகள் மற்றும் தேவனுடைய பரிசுத்த மனுஷர்களைக் கருவிகளாகப் பயன்படுத்தி, தேவனுடைய வார்த்தைகளானது வழங்கப்பட்டன என்பதை விவரிக்கிறதென நாங்கள் ஆலோசனையாகக் கூறுகிறோம். (2 பேதுரு 1:21)

மேலும், இங்கே **"மன்னா"** அதன் உருவாக்கத்தில் **"பனி"** உடன் தொடர்புடையதாக உள்ளது.

மேலும் **"பனி"** என்பது வேதாகமத்தில் **"பரிசுத்த ஆவியைச்"** சித்தரிக்கிறது என்பதை வேத மாணவர்களாகிய நாம் அறிவோம். வாசிக்கலாம் –

**சங்கீதம் 133:2, 3**

**"அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும், எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்."**

மேலும் மெய்யாகவே, முன்பு வாசித்ததுபோலத் தேவனுடைய இந்த வார்த்தைகளானது, தீர்க்கதரிசிகள் மூலமாகப் பரிசுத்த ஆவியினால் வழங்கப்பட்டவைகளே. மீண்டும் இதைப்பற்றி வாசிக்கலாம் –

**1 பேதுரு 1:12**

**"தங்கள்நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்."**

இப்போது, இந்த மன்னா கொடுக்கப்படுதலைக் குறித்துக் கொடுக்கப்பட்டுள்ள கருத்தொன்றினைக் கவனிக்கையில் சுவாரஸ்சியமாக உள்ளது! அறிவியல் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி செய்து சில விவரங்களை கண்டுபிடித்துள்ளனர்.

முதலாவதாக, எருசலேமிலுள்ள எபிரெய பல்கலைக்கழக **(The Hebrew University at Jerusalem)** விஞ்ஞானி டாக்டர் போடென்ஹைமர் **(Dr. Bodenheimer)**

**"டேமரிஸ்க் மரம்" (The Tamarisk Tree)**

என்னும் ஒரு குறிப்பிட்ட மரத்தை உண்ணும் இரண்டு பூச்சிகளால் **"மன்னா"** தயாரிக்கப்படுகிறது என்பதைக் கண்டுபிடித்தார்.

தேனீக்கள் அமிழ்தத்தை எடுத்துத் தேனை உற்பத்தி செய்யப் பூக்களிடம் செல்வதுபோல, இந்தப் பூச்சிகளும் இந்த மரத்தில் வாழ்கின்றன, அதன் இனிப்புச் சாறுகளிலிருந்து மன்னாவை உற்பத்தி செய்கின்றன. இந்தச் செயல்முறையைக் காட்டும் உண்மையான புகைப்படங்களை விஞ்ஞானி வைத்திருக்கிறார் (இணையத்தைப் பார்க்கவும்).

(ஆதாரம்: **Bible Student Monthly (B.S.M)** - பைபிள் ஸ்டூடண்ட் மன்த்லி, ஜனவரி / பிப்ரவரி 2017 **"மன்னா கொடுக்கப்படுதல்"** – சகோ.**A.O**.ஹட்சன்).

அந்த இரண்டு பூச்சிகளின் பெயர்கள்

**- Trabutina Mannipara (ட்ராபுடினா மன்னிபாரா)**

மற்றும்

**- Naia Coccus Serpentinus Minor (நியா கோகஸ் செர்பெண்டினஸ் மைனர்)**

(சற்றே பயமுறுத்தும் பெயர் உச்சரிப்புகள் தான்! பிரியமானவர்களே!)

இரண்டாவதாக, விக்டோரியா இன்ஸ்டிடியூட்டில்(**Victoria Institute**) வழங்கப்பட்ட ஒரு விஞ்ஞான ஆய்வறிக்கையானது, யாத்திராகமக் காலத்தின்போது உலகில் பொதுவாகக் கடுமையான மழை (ஈரமான வானிலை) இருந்தது என்பதற்கான ஆதாரங்களை முன்வைக்கிறது. மன்னாவின் உற்பத்திக்கு இரண்டு காரணிகள் தேவை என்பதற்கான சான்றுகளை இது வழங்குகிறது. அதாவது,

**– மரங்கள் மற்றும் மழைப்பொழிவு**

(ஆதாரம்: **Bible Student Monthly (B.S.M)** - பைபிள் ஸ்டூடண்ட் மன்த்லி, ஜனவரி / பிப்ரவரி 2017 **"மன்னா கொடுக்கப்படுதல்"** – சகோ.**A.O**.ஹட்சன்).

இந்த இரண்டு விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் தேவன் இந்த **"வார்த்தைகளை"** எப்படிக் கொடுத்தார் என்பதற்கான கூடுதலான ஆதாரங்களை நமக்குத்

தருகிறது. இந்த விவரங்களை அடையாளங்களாகப் பார்க்கும்போது, இவ்வாறு நாங்கள் சில ஆலோசனைகளை வழங்குகிறோம். வாருங்கள் அவற்றைப் பார்க்கலாம்.

**1)** வேதவசனங்களில், தேவனுடைய வார்த்தைகள் "**பூச்சிகளாகக்**" குறிக்கப்படுகின்றன, குறிப்பாக, ஐந்தாம் எக்காளத்தினுடைய தீர்க்கதரிசன விளக்கத்தின் கீழுள்ள

வெளிப்படுத்துதல் 9:3-ல் "**வெட்டுக்கிளிகள்**" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இங்கே, "**வெட்டுக்கிளிகள்**" என்பவைகள் ஜான் விக்லிஃப் அவர்களால் எழுதி முதலில் மொழிபெயர்க்கப்பட்ட ஆங்கில வேதாகமத்தின் மூலம் வெளிப்பட்ட தேவனுடைய வார்த்தைகளையும் அவரது போதனைகளையும் குறிக்கிறது)

மேலும், நாம் பார்த்த "**மரங்கள்**" என்பன மனுஷர்களுக்கான பொதுவான அடையாளமாகும்.

இதற்கு உதாரணமாக சில வசனங்களைக் காண்போம்.

(நமது வேதாகமத்தில் மரங்கள் என்னும் அடையாளத்தில்)

**– நீதிமான்கள்**

(சங்கீதம் 1:3, 52:8 , 92:12)

மற்றும்

(நமது வேதாகமத்தில் மரங்கள் என்னும் அடையாளத்தில்) ...(அநீதிமான்கள்)

**– துன்மார்க்கமான மனுஷர்**

(சங்கீதம் 37:35, ஏசாயா 55:13)

.......ஆகிய இருவரையும் குறிக்கிறது

ஆனால், இங்கே "**டேமரிஸ்க் மரம்**" என்பது ஒரு குறிப்பிட்ட வகையான மரமாகும். அவருடைய வார்த்தைகளை வெளிப்படுத்தும் இந்த விசேஷித்த "**ஊழியர்களைத்**" தேவன் தேர்ந்தெடுப்பதை இது சரியாகக் குறிக்கிறது!

மேலும், இந்த இரண்டு வகையான பூச்சிகளுமே "**தேவனுடைய வார்த்தைகளில்**" உள்ள அந்த விசேஷித்த அம்சத்தை நன்கு அடையாளப்படுத்துகின்றன.

– அது **வேதாகமத்தின் இரண்டு ஏற்பாடுகளே !!**

ஆம் நாம் அறிந்திருக்கிறோம்.... **ஏசாயா 28:10**

**"கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் என்கிறார்கள்."**

மீண்டுமாக... **எசேக்கியேல் 21:9**

**"......பட்டயம் கூர்மையாக்கப்பட்டது, பட்டயம் கூர்மையாக்கப்பட்டது,...."**

**" ...பழைய ஏற்பாடு என்பது மறைக்கப்பட்ட புதிய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்பது வெளியாக்கப்பட்ட பழைய ஏற்பாடு... "**

என நன்றாய்ச் சொல்லப்பட்டுள்ளது!!

மற்றும்

**2)** இரண்டாவது விஞ்ஞான உண்மையில் மன்னாவின் உற்பத்திக்குத் தேவையான இரண்டு காரணிகள் காணப்பட்டன

**– மழைப்பொழிவு மற்றும் மரங்கள்.**

மீண்டும் இங்கேயும், தேவனுடைய பரிசுத்த மனுஷர்களையும் தீர்க்கதரிசிகளையும் (**மரங்களாக**) கருவிகளாகப் பயன்படுத்தி தேவனானவர் பரத்திலிருந்து தமது தெய்வீக வெளிப்பாட்டை ( **வெளிப்படுத்தல் 22:17** – இல் "**சத்தியம்**" என்பது "**தண்ணீர்**" எனக் குறிப்பிடப்படுகிறது) (**மழைப்பொழிவாகப்**) பொழிந்தருளின காலமாக யூத யுகத்தின் காலமானது இருந்தது என்பதை இது சரியாகக் குறிக்கிறது.

ஆமாம்! யோபு புஸ்தகத்தைத் தவிர, முழு பழைய ஏற்பாடும், யூத யுகத்தில் வெளிப்படுத்தப்பட்டுப் பதிவு செய்யப்பட்ட ஒன்றாகும். எனவே இவ்வாறு நாம் வாசிக்கிறோம்

**உபாகமம் 4:6-8**

**" ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுமுள்ள ஜனங்கள் என்பார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது? இந்நாளில்**

**நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?"**

மெய்தான், யூத யுகத்தில் (மாம்சீக) இஸ்ரயேல் ஜனங்கள் தேவனுடைய வார்த்தைகளின் மாபெரும் வெளிப்பாட்டைப் பெற்றிருந்தனர்.
அடுத்த கண்ணோட்டமாக –

## 2. " மன்னா " கொடுக்கப்படுதலுக்கு இஸ்ரயேலர்களின் எதிர்வினை!

**(The Israelites' Reaction - to the giving of the "MANNA" !)**

ஆமாம்! இப்பொழுது, இஸ்ரயேல் ஜனங்களுக்கு மன்னா கிடைக்கும்போது அவர்களிடம் வெளிப்பட்ட அவர்களுடைய எதிர்வினை (உணர்வுகளும், பேச்சுகளும், மறுமொழியும்) எவ்வாறு இருந்தது என்பதை ஆராய்ச்சி செய்யலாம். வாசிப்போம்,

**யாத்திராகமம் 16:15**

**" ....அது இன்னது என்று அறியாதிருந்து, ஒருவரை ஒருவர் பார்த்து, இது என்ன என்றார்கள்..."**

பிரியமானவர்களே! இது, தேவனுடைய வார்த்தையானது முதன்முதலில் பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டபோதும், அவர்களால் (இஸ்ரயேல் ஜனங்களால்) தேவனுடைய திட்டத்தைக் கண்டுணர முடியாதவர்களாக இருந்தார்கள் என்பதை நமக்கு நன்றாகச் சுட்டிக்காட்டுகிறது.

ஆம், தீர்க்கதரிசிகளில்கூட யாரெல்லாம் தேவனுடைய வார்த்தைகளை வழங்கினார்களோ, அவர்களால் கூட அந்த வார்த்தைகளின் மூலப்பொருளை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையை நம்மால் காணமுடிகிறது. இதற்கான உதாரணங்கள் நம் மத்தியில் உள்ளன...அவைகளில் சிலவற்றை இப்போது காண்போம்...

**ஆபகூக் தீர்க்கதரிசியானவர் – ஆபகூக் 1:2–4 – இல்**

**" கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன். நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே! நீர் எனக்கு அக்கிரமத்தைக் காண்பித்து, என்னைத் தீவினையைப் பார்க்கப்பண்ணுகிறதென்ன? கொள்ளையும் கொடுமையும் எனக்கு எதிரே நிற்கிறது; வழக்கையும் வாதையும் எழுப்புகிறவர்கள் உண்டு. ஆகையால் நியாயப்பிரமாணம் பெலனற்றதாகி, நியாயம் ஒருபோதும் செல்லாமற்போகிறது; துன்மார்க்கன் நீதிமானை வளைந்துகொள்கிறான்; ஆதலால் நியாயம் புரட்டப்படுகிறது."** என்று தனது உள்ளுணர்வுகளை வெளிப்படுத்துகிறதைக் காண்கிறோம். இது தீமையின் அனுமதி என்னும் மாபெரும் அதேசமயம், அக்காலத்திலே மறைவான ஒரு சத்தியமாகும்.

பிரியமானவர்களே, அதே போல,

**தாவீதும் – சங்கீதம் 44:23 – இல்**

**"ஆண்டவரே, விழித்துக்கொள்ளும்; ஏன் நித்திரை பண்ணுகிறீர்? எழுந்தருளும், எங்களை என்றைக்கும் தள்ளிவிடாதிரும்."**

தேவனுடைய அர்த்தமுள்ள ஞானமான அமைதியை அக்காலத்திலே முழுவதும் புரிந்துகொள்ள முடியாமல், தேவன் ஒருவேளை நித்திரை பண்ணுவதாகத் தாவீதுக்குத் தோன்றியிருக்கிறது.

**தானியேலும் – தானியேல் 12:8, 9 – இல்**

**" நான் அதைக் கேட்டும், அதின்பொருளை அறியவில்லை; ஆகையால்: என் ஆண்டவனே, இவைகளின் முடிவு என்னமாயிருக்கும் என்று கேட்டேன். அதற்கு அவன் தானியேலே, போகலாம்; இந்த வார்த்தைகள் முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டு முத்திரிக்கப்பட்டும் இருக்கும்."**



தான் பதிவுசெய்த வார்த்தைகளைப் தாமே புரிந்துகொள்வது குறித்தான தானியேலின் கேள்வியை நம்மால் காண முடிகிறது !!

ஆம் ! இவ்வாறு தான் அவர்களின் பதிலுரைகளும், எதிர்வினையும் வேதாகமத்தில் பதிவாகியுள்ளதாகப் பார்க்கிறோம்.
இதைப்போலவே, மன்னாவிற்கான மற்றொரு எதிர்வினையைப் பற்றியும், நாம் வாசிக்கலாம்,

**எண்ணாகமம் 11:6,10**

**“ இப்பொழுது நம்முடைய உள்ளம் வாடிப்போகிறது; இந்த மன்னாவைத்தவிர, நம்முடைய கண்களுக்கு முன்பாக வேறொன்றும் இல்லையே என்று சொன்னார்கள். ....ஜனங்கள் தங்கள் தங்கள் கூடாரவாசலில் நின்று அழுகிறதை மோசே கேட்டான்;...”**



ஜனங்களின் இந்த அதிருப்தி, தேவனுடைய வார்த்தைக்கு (மற்றும் தேவனுடைய சித்தத்திற்கு) விழுந்துபோன(அல்லது பொல்லாத) எதிர்வினையை நன்றாகக் குறிக்கிறது.

இது சுயநலம் தான் – ஆம், சுயத்தின் ஆவியானது தேவனுடைய சித்தத்திற்கு அடிப்பணிவதையும் – கீழ்ப்படிவதையும் அனுமதிப்பதே இல்லை, பிரியமானவர்களே!

உதாரணம்: **யோபுவின் மனைவி.**



தேவனுடைய சித்தத்திற்கு(அவர் அனுமதித்தவைக்கு) யோபு கீழ்படிந்திருக்கும் போது, அவர் மனைவி சுயத்தின் ஆவியினால் யோபு 2:9 –இல் இவ்வாறு கூறுகிறார்.

**யோபு 2:9**

**“ அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனைவிடும் என்றாள். ”**

ஆனால், இந்த சுவிசேஷ யுகத்தின் **“புது சிருஷ்டியோ,”** தங்களது **“மண்பாண்டங்களில்”** உள்ள **“விழுந்துபோன மாம்சம்”** எனும் இந்த உண்மைக்கு உரியவகையில் சாட்சியமளிக்கும்...

**2 கொரிந்தியர் 4:7**

**“ இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.”**

அப்போஸ்தலர் பவுல் தன்னுடைய அனுபவங்களைப்பற்றி **ரோமர் 7:14-25** – இல் சாட்சியளிக்கிறார்.

**“ மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன். எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை; நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே. ஆதலால் நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்யவேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை. ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். அந்தப்படி நான் விரும்பாததை நான் செய்தால், நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. ஆனபடியால் நன்மைசெய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன். ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது. நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்.”**

அடுத்ததாக…

# 3. "மன்னாவைக்" குறித்ததான கட்டளைகள்!

## (The Instructions Concerning the "Manna" !)

இஸ்ரயேல் ஜனங்களுக்கு மன்னாவைக் குறித்தான சில வழிமுறைகள் மற்றும் கட்டளைகள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டளைகளில் சிலவற்றை **யாத்திராகமம் 16** – வது அதிகாரத்தில் வாசிக்கலாம்.

**வசனம் 16 – " அவரவர் புசிக்கும் அளவுக்குத் தக்கதாக அதில் எடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்களிலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்தின்படி, அவனவன் தன் தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காக தலைக்கு ஒரு ஓமர் அளவு எடுத்துக்கொள்ளக்கடவன்."**

**வசனம் 19 – " ஒருவனும் விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் வைக்கக் கூடாது."**

**வசனம் 26 – " ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம்நாள் ஓய்வுநாளாயிருக்கிறது; அதிலே அது உண்டாயிராது."**

**வசனம் 33-34 – " மேலும், மோசே ஆரோனை நோக்கி: நீ ஒரு கலசத்தை எடுத்து, அதிலே ஒரு ஓமர் அளவு மன்னாவைப் போட்டு, அதை உங்கள் சந்ததியாருக்காகக் காப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியிலே வை என்றான். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அது காக்கப்படும்படி ஆரோன் அதைச் சாட்சி சந்நிதியில் வைத்தான். "**

இந்தக் கட்டளைகளின் ஆவிக்குரிய முக்கியத்துவத்தை இப்போது ஆராய முயற்சிக்கலாம்....

**வசனம் 16 – " அவரவர் புசிக்கும் அளவுக்குத் தக்கதாக அதில் எடுத்துச் சேர்க்கக்கடவீர்கள்; உங்களிலுள்ள ஆத்துமாக்களின் இலக்கத்தின்படி, அவனவன் தன் தன் கூடாரத்தில் இருக்கிறவர்களுக்காக தலைக்கு ஒரு ஓமர் அளவு எடுத்துக்கொள்ளக்கடவன் என்றான்."**

சரி, நேரடியான அர்த்தத்தில் அதிகாலையில் இருந்து சூரியன் எழுந்து வெப்பம் மன்னாவை உருக்கும்வரையிலான அந்த நிலையான நேரத்தில் (யாத்திராகமம் 16:12) ஜனங்கள் ஒன்றுகூடி அதைத் தங்கள் கூடாரங்களுக்குள் கொண்டு வந்து, ஒரு குவியலை உருவாக்கி, பின்னர் ஒவ்வொருவருக்கும் நியமிக்கப்பட்ட **" ஓர் ஓமர் "** அளவுக் கொடுக்கப்பட்டது, இது சமத்துவத்திற்கு வழிவகுக்கின்றது!

(ஆதாரம்: **"MySword"** செயலியில் **கில்** (Gill) அவர்கள் எழுதிய வேதாகமக் கருத்துரை)

ஆக, ஒவ்வொருவரும் **தனித்தனியாக மன்னாவைச் சேகரிக்க வேண்டியிருந்தபோது, பகிர்தலில்** ஒரு மிகவும் விசேஷித்ததும் **தெய்வீகமான நியமிக்கப்பட்ட கூறு** ஒன்று இங்கே இருப்பதையும் காணமுடிகிறது!




– இது அனைவருக்கும் போதுமான ஏற்பாடுகளைச் செய்ய உதவியது!

இது இரண்டு வகையான பாடங்களை நமக்குப் போதிப்பதாக நாம் நம்புகிறோம் –

**1)** தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தைப் பெறுவதற்கான ஒவ்வொருவரின் தனிப்பட்ட பொறுப்பு மற்றும் முயற்சி.

இவ்வாறாக இதைக்குறித்து நாம் வாசிக்கலாம் –



**2 தீமோத்தேயு 2:15**

**“உன்னை … உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு……”**

**ஆமாம்! ஒருவர் முதலில் தனக்காகப் படிக்க வேண்டும் !**



(இரவின் இனிய கீதங்கள்: மார்ச் 2)

யாத்திராகமம் 16: 16-ல் உள்ள இந்த “**அனுதின சேகரிப்பு**” குறித்த தனது கருத்துக்களில் சகோ.ரசல் இவ்வாறு எழுதுகிறார்:

**“ …பரலோக அப்பத்தைப்/மன்னாவைப் பெறுவதற்கு பங்கெடுப்பவர் தரப்பிலிருந்து ஓரளவாவது முயற்சி தேவைப்படுகிறது…. ”**
**(R3036: 6, R5279: 4).**

**2)** மேலும், மன்னாவின் தனிப்பட்ட சேகரிப்பு, அனைவருக்கும் போதுமான அளவு வழங்குவதற்கான பகிர்வுக்கு எப்படி வழிவகுத்ததோ, அதுபோலவே, கர்த்தரின் வார்த்தையைப் படிப்பதற்கான ஒரு கொள்கையும் உள்ளது. அதைப்பற்றி நாம் வாசிக்கலாம்…

**நீதிமொழிகள் 11:25**

**“ எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்.”**

மெய்தான்! ஆவிக்குரிய ஆசீர்வாதம் மற்றும் அபிவிருத்தியடைவதற்கான இரகசியம் வேதவசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது ! கர்த்தரின் வார்த்தையைச்(மன்னாவைச்) சேகரித்தவர்கள்… **அந்தக் கிருபையையும் சத்தியத்தையும் பெற்றுக்கொண்டவர்கள் மற்றவர்களுக்கும் வழங்குகிறவர்களாய் இருக்க வேண்டும்.** அதன் மூலமாகக் கர்த்தருக்குள் நாம் பலப்படவும், மற்றவர்களுக்கு உதவவும் நாம் பெற்ற கிருபைகளை மற்றவர்களுக்கு வழங்குவதால் உண்டாகும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்

இது தேவனுடைய அன்பின் பரிசுத்த ஆவியினை முழுமையாகப் பிரதிபலிக்கிறது! (மார்ச் 29 இன் இரவின் இனிய கீதங்களை வாசியுங்கள்)

**வசனம் 19** –"**மோசே அவர்களை நோக்கி: ஒருவனும் விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் வைக்கக் கூடாது.**"

இது, நிச்சயமாக மன்னாவைச் சேகரிப்பது மற்றும் சேமிப்பது தொடர்பான ஓர் எச்சரிப்பாக இருந்தது. பின்னர் அது சத்திய வார்த்தையின் ஆராய்ச்சி மற்றும் உடைமையைக் குறித்ததான எச்சரிப்பையும் குறிக்கிறது!

இதைப்பற்றி நாம் வாசிக்கலாம் –

## நீதிமொழிகள் 11:24

"**வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம்பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு.**"

இது, சத்திய வார்த்தையின் "**ஆராய்ச்சி**" மற்றும் "**ஊழியம்**" ஆகியவற்றை சகோதரர்கள் மத்தியிலும் இன்னும் உலகத்தின் மத்தியிலும் செய்யப்படும்போதும், "**சுயத்தின் ஆவியை**" வெளிப்படுத்த அனுமதிக்கும்போதுமுள்ள எச்சரிப்பாகும்.

இது திருச்சபைக்கு ஒரு வேதகாமப்பூர்வமான அறிவுரையாகக் காணப்படுகிறது !

## பிலிப்பியர் 2:3–5

"**ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;...**"

ஆமாம்! "**மன்னா**" –வின் (நேரடியான) அடையாளத்தில் நன்றாகக் காணப்படுவது போல, சுயநலமும் அதன் பலனான பெருமையும் சத்தியத்தின் ஊழியத்தில் ஒரு சீர்கெட்ட தாக்கத்தைக் கொண்டுள்ளது!

அடுத்தது,

**வசனம் 26** – "**ஆறுநாளும் அதைச் சேர்ப்பீர்களாக; ஏழாம்நாள் ஓய்வுநாளாயிருக்கிறது; அதிலே அது உண்டாயிராது.**"


மேற்காண்பது யாதெனில், நிஜமான "**ஓய்வுநாள்**" "**ஆயிரமாண்டு யுகம்**" மற்றும் "**மன்னா**" என்பன தேவனுடைய வார்த்தைகள்

கொடுக்கப்படுவதற்கும் அவைகளைச் சேகரிப்பதற்குமான அதன் தொடர்புகளுக்கான குறிப்புகளேயாகும் !

மன்னாவைப் பற்றிய இந்த அறிவுறுத்தலின் ஆவிக்குரிய முக்கியத்துவத்தின் மூலம் இது எதைச் சரியாகக் குறிக்கிறது அல்லது அடையாளப்படுத்துகிறது என்பதுபற்றி... எங்களுக்கும்கூட மிகவும் உறுதியாகத் தெரியவில்லை!

ஆனாலும்... நாங்கள் எங்களது தாழ்மையான ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கின்றோம்!! இதோ, இங்கே...


இப்போது " **ஓய்வுநாள்** " என்பது ஆயிரமாண்டு யுகத்தைக் குறிக்கும். மேலும் கர்த்தராகிய இயேசு ஓய்வுநாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என (மத்தேயு 12: 8) –இல் வாசிக்கிறோம். இது 1874 – ஆம் வருடம் அக்டோபரில் ஆண்டவர் தேவனுடைய ஜீவ வார்த்தையாகத் (யோவான் 1:1) திரும்பினதைக் குறிப்பதாகத் தெரிகிறது. இங்கும்கூட வரையறுக்கப்பட்ட மன்னாவைச் சேகரித்து செயலாக்குவதற்கான செயல்முறைகளுக்கு இப்போது

 **ஓய்வு**

...கிடைக்கும் என்று தெரிகிறது. .....சொல்லப்போனால் தேவனுடைய வார்த்தையையும் சத்தியத்தையும் புரிந்துகொள்வதற்கான ஒரு தாராள அருட்கொடையான வெளிப்பாட்டின் மூலம் ஓய்வு கிடைக்கும்!

அக்டோபர் 1874 முதற்கொண்டு இதனை இரண்டு கோணங்களில் காண்கிறோம்.

முதலாவது, இந்த

 " **அவருடைய ஆயத்தம்பண்ணும் நாளிலே** "

– லவோதிக்கேயா சபைக்கு இந்த அருட்கொடையானது வழங்கப்படுகிறது!

**லூக்கா 12:37**

**" எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரை கட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

## வெளிப்படுத்தல் 10:7 / உன்னதப்பாட்டு 5:1

**" வானத்தையும் அதிலுள்ளவைகளையும், பூமியையும் அதிலுள்ளவைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமானவர்மேல் ஆணையிட்டுச் சொன்னான்."**

**" என் சகோதரியே! என் மணவாளியே! நான் என் தோட்டத்தில் வந்தேன், என் வெள்ளைப்போளத்தையும் என் கந்தவர்க்கங்களையும் சேர்த்தேன்; என் தேன்கூட்டை என் தேனோடு புசித்தேன்; என் திராட்சரசத்தை என் பாலோடும் குடித்தேன். சிநேகிதரே! புசியுங்கள்; பிரியமானவர்களே! குடியுங்கள், பூர்த்தியாய்க் குடியுங்கள்."**

பின்னர்... இராஜ்யத்தின்

**கண்ணுக்குப் புலப்படும் பகுதி**

வெளிப்படும் போது, இஸ்ரயேலுக்கும் முழு உலக மனுக்குலத்திற்கும் வழங்கப்படும்!

## ஏசாயா 25:6

**" சேனைகளின் கர்த்தர் இந்த மலையிலே சகல ஜனங்களுக்கும் ஒரு விருந்தை ஆயத்தப்படுத்துவார்; அது கொழுமையான பதார்த்தங்களும், பழமையான திராட்சரசமும், ஊனும் நிணமுமுள்ள பதார்த்தங்களும், தெளிந்த பழமையான திராட்சரசமும் நிறைந்த விருந்தாயிருக்கும்."**

தொடர்ச்சியாக..

**வசனம் 33-34** –**"மேலும், மோசே ஆரோனை நோக்கி: நீ ஒரு கலசத்தை எடுத்து, அதிலே ஒரு ஓமர் அளவு மன்னாவைப் போட்டு, அதை உங்கள் சந்ததியாருக்காகக் காப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியிலே வை என்றான். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அது காக்கப்படும்படி ஆரோன் அதைச் சாட்சி சந்நிதியில் வைத்தான்."**

இங்கு நாம் கவனிப்பது யாதெனில், வரப்போகிற சந்ததியானது பார்க்கும்படிக்கு அந்த மன்னாவில் ஓர் ஓமர் அளவு எடுத்து வைக்கும்படிக்கு தேவன் கூறியிருக்கிறார். பின்பு மன்னாவானது கலசத்தில் வைக்கப்பட்டது. நம்முடைய ஆலோசனை என்னவென்றால், இது " **மண் கலசமாக**" இருந்திருக்கலாம் என்பதுவே.



ஏனென்றால், ஆசரிப்புக்கூடாரம் இன்னும் கட்டப்படாமலிருந்தது. அந்தக் காலங்களிலெல்லாம், மண்ணினால்தான் கலசங்கள் பண்ணப்பட்டிருந்தன. ஆகவேதான்,அந்த மன்னாவானது, " **மண் கலசத்திலே** " வைக்கப்பட்டிருக்கும் என்று நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

இப்போது மன்னாவைப் பற்றிய இந்தக் கடைசி அறிவுறுத்தலுக்கு சகோ.ரசல் எழுதிய விவிலிய கருத்துக்கள் (ஈ.பி.சி / **E.B.C**) (பக்கம் 30 –இல்) இருக்கின்றன.

சகோ.ரசலின் விளக்கம் –

" ...நம்முடைய கர்த்தருடைய மாம்சம் அழிவைக் காணவில்லை என்பதையும், எல்லையற்ற அன்பு மற்றும் முழுமையான கீழ்ப்படிதலின் நித்திய சாட்சியாக அநேகமாகக் காக்கப்படுவதையும் அடையாளப்படுத்துகிறது. **(B130.)** திருச்சபையின் அனைத்து அங்கத்தினர்களுக்கும் வாக்களிக்கப்பட்ட அழியாத, அழிவில்லாமை நிலைமையை விளக்குகின்றதாயிருக்கிறது.

**ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுப்பேன்....**(வெளி. 2:17) **(T122.)**"

மெய்தான் ! மேற்கண்ட விளக்கங்களின் மூலம் நாம் புரிந்துகொள்வது யாதெனில், மன்னாவானது இந்தக் கலசத்தில் சேகரிக்கப்பட்டுச் சேமித்து வைக்கப்பட்ட மற்ற எல்லா மன்னாவையும் போலல்லாமல் ஆச்சரியமான வகையில் " **அழியாது** " இருந்தது என்னும் கூற்றுக்கான குறிப்பாகும்!

**அழியாது** இருந்ததான இந்த " **மன்னா பாத்திரம்,** " தேவனுடைய வார்த்தையினையும் ....

"**...ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கின...**"

**(2 தீமோத்தேயு 1:10)**

இயேசுவின் மரணத்தினால் வெளிப்படுத்தப்பட்டு

"**...(அடக்கமாயிருந்த)....(இரகசியம்)....**" **(ரோமர் 16:25)**

ஆக இருந்த இந்தச் சுவிசேஷ யுகத்தின் இந்த "**...இவ்வளவு பெரிதான இரட்சிப்பினுடைய...** **(எபிரெயர் 2: 4)** **'மறைக்கப்பட்ட'** அம்சத்தினையும் குறிக்கிறது என்று நாங்கள் பரிந்துரைக்க விரும்புகின்றோம்.

சுவிசேஷ யுகத்தினுடைய " **இவ்வளவு பெரிதான இரட்சிப்பின்** " இந்த அம்சங்கள் அனைத்தும், மன்னா பற்றிய **இந்த இறுதிக் கட்டளையில்** குறிப்பிடப்பட்டுள்ளது என தங்களிடம் பகிர்ந்து கொள்கின்றோம்.

## 4. "மன்னா" – அதன் பயன்பாட்டின் விதம் மற்றும் செயல்முறை...

**(The "Manna" - The MANNER and PROCESS of its usage)**

நாம் வாசிக்கலாம் –

**எண்ணாகமம் 11:8**

**" ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக்கொண்டுவந்து, ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது, பானைகளில் சமைப்பார்கள்; அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள்; அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருந்தது."**

**யாத்திராகமம் 16:23**

**" அவன் அவர்களை நோக்கி: கர்த்தர் சொன்னது இதுதான்; நாளைக்குக் கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வுநாளாகிய ஓய்வு; நீங்கள் சுடவேண்டியதைச் சுட்டு, வேவிக்கவேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளைமட்டும் உங்களுக்காக வைத்துவையுங்கள் என்றான்."**

ஆக, இந்த மன்னா என்பது ஒருபோதும் பெற்றுக்கொண்ட விதமாக அப்படியே பச்சையாகப் புசிக்கப்படவில்லை... சொல்லப்போனால், சேகரிக்கப்பட்டவுடனே பச்சையாகவே வாயில் அப்படி வெறுமையாகப் போட்டுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருக்கவில்லை !

**ஆம், இது, உடனடியாகச் சாப்பிடக்கூடிய ஒன்றல்ல!**

அது உண்ணத்தகுந்த உணவாக மாறுவதற்கு முன்பு அதற்கு ஒரு செயல்முறையானது தேவைப்படுகிறது!

நாம் மேலே வாசித்த வசனங்களில், அந்தச் செயல்முறையானது இவ்வாறாக விவரிக்கப்பட்டுள்ளது, அதாவது,

- அரைத்தல்
- உரல்களில் இடித்தல்
- பானைகளில் சமைத்தல்
- மேலும் வேகவைத்தல் (கொதித்தல்)



மேலும், மன்னா (என்பது) சேகரிக்கும்போது அவைகள் தானியங்கள் போல இருந்தது. யாத்திராகமம் 16: 31 –இல் நாம் வாசித்தபடி அது **"கொத்தமல்லி விதை"** போல (**சங்கீதம் 78:24 – வானத்தின் தானியம்**) உண்ணத்தகுந்த உணவாக மாறுவதற்கு முன், செயல்முறைக்குள்ளாக்கப்பட்டுச் சமைக்க வேண்டிதாகவுமிருந்தது.

**இது எதனைக் குறிக்கிறது?**

ஆம், மன்னாவானது எவ்வாறு "**தானிய**" வடிவில் இருக்கும்போது, புசிப்பதற்கு உகந்ததாயும் உணவாக மாற ஏற்றதாயுமில்லாமல் இருந்ததோ, அதுபோலவே, "**தேவனுடைய வார்த்தையும்**" அல்லது "**வேதவசனங்களும்**" இருக்கும். வார்த்தைகள் மாத்திரம் அதனுள் இருக்கும் ஜீவனை வெளிப்படுத்தாது!

– நாம் ஒரு வேத வசனத்தை வாசிப்பதன் மூலமாக இதனைப் புரிந்துக்கொள்ளலாம்.

**யோவான் 17:17**

**"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்."**

ஆம்! வார்த்தையில் சத்தியம் கண்டுபிடிக்கப்பட வேண்டியதாயிருக்கின்றது! – இதை மீண்டுமாக காண்கிறோம்




**சங்கீதம் 119:105**

**உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.**



ஆம்! "**வசனம்**" தீபமும்... "**சத்தியம்**" வெளிச்சமுமாயிருக்கிறது !

ஆக, மன்னாவைப் பற்றி இங்கே காட்டப்பட்டுள்ள செயல்முறையானது, தேவ வார்த்தையிலிருந்து "**ஜீவனைக் கொடுக்கும்**" சத்தியத்தைப் பெறுவதற்கான "**செயல்முறையைக்**" குறிப்பதாக நாம் ஆலோசனை வழங்குகிறோம்!

அந்தச் செயல்முறைகளில் சிலவற்றைப் பார்ப்போமாக

## 1) யோவான் 16:13 (வாசிக்கவும்)

**" சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்:"**

இங்கே இயேசுகிறிஸ்து தேவனின் வார்த்தையைச் செயலாக்கத் தேவையான மிக முக்கியமான "**மூலப்பொருளான**" பரிசுத்த ஆவியைப் பற்றிப் பேசுகிறார்!

நாம் அனைவரும் அறிந்து இருக்கிறபடி, சுவிசேஷ யுக மற்றும் ஆயிரவருட யுகமாகிய இந்த இரு யுகங்களிலும் இருவிதமான இரட்சிப்புகள் வெளிப்படும்போது

ஜீவனைக் கொடுக்கும் வார்த்தையைக் கொடுக்கப்படுவதற்கு முன்பதாகவே எப்போதும் பரிசுத்த ஆவி கொடுக்கப்படுவது முன்நிகழுகின்றதாக இருக்கிறது.

இதனைப்பற்றி நாம் வாசிக்கிறோம் –

**அப்போஸ்தலர் 2:17, 18**

**“ கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்; உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்; என்னுடைய ஊழியக்காரர்மேலும், என்னுடைய ஊழியக்காரிகள்மேலும் அந்நாட்களில் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்...”**

**யோவேல் 2:28, 29**

**“ அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள்மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்....”**

இப்படியாக உலகமும் அநேகக் கிறிஸ்தவர்களும் கூட இன்னும் தேவனுடைய திட்டத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை, இது இப்போது ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலின் மூலம் பெறப்பட்ட புதிய சிருஷ்டிகளுக்கு மட்டுமே அருளப்பட்டிருக்கிறது. இதனைப்பற்றி நாம் வாசிக்கிறோம் –

**1 கொரிந்தியர் 2:13, 14**

“......பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி.....” (வ.13)

“ .....ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால்.....” (வ.14)

**2.) ஏசாயா 34:16 (வாசிக்கவும்)**

**“ கர்த்தருடைய புஸ்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்.”**

இது தேவனுடைய வார்த்தையை உண்மையில் எப்படிப் புரிந்துகொள்வது என்ற மிக முக்கியமான "**நியமத்தைக்**" குறிக்கிறது!
ஆம்! இதுவே தேவனுடைய வார்த்தையில் தேவன் எவ்வாறு சத்தியத்தைப் பதிவு செய்துள்ளார் என்பதற்கான விதம் மற்றும் நியமமாகும்!

நாம் மேலும் வாசிக்கலாம்.....

**ஏசாயா 28:10**

**" கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம்....."**

**&**

**ஏசாயா 34:17**

**" அவரே அவைகளுக்குச் சீட்டுப்போட்டார்; அவருடைய கையே அதை அவைகளுக்கு அளவுநூலால் பகிர்ந்து கொடுத்தது; அவைகள் என்றைக்கும் அதைச் சுதந்தரித்துத் தலைமுறை தலைமுறையாக அதிலே சஞ்சரிக்கும்....."**

மெய்தான்! இவ்விதம் "**அங்குமிங்குமாக**" வைத்துள்ள ஏற்பாட்டின் மூலம் வார்த்தையில் தேவனானவர் தமது போதனைகளை "**மறைத்து**" வைப்பது என்பது அவர் சத்தியத்தைப் பூட்டிய ஒரு விதமாகும், மேலும் வார்த்தையைத் திறக்க வேண்டுமானால் இந்தத் "**திறவுகோலை**" ஒருவர் பெற்றிருக்கவேண்டும்!!

## 3.) ஏசாயா 8:20

**" .....வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும் ...."**

இது தேவனுடைய வார்த்தையின் செயல்முறைகளில் மற்றொன்றாகும். வேதமும் சாட்சியாகமமும் என்றால் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு என்பவைகளேயாகும். இந்த இரண்டு ஆகமங்களின் வழியாகவே தேவன் சத்தியத்தை வெளிப்படுத்துகிறார். இங்கு தேவனுடைய சத்தியத்தை அவிழ்ப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்கும் இரு ஏற்பாடுகளும் கொண்டிருக்கும் தொடர்பை நம்மால் உணர முடிகிறது.

இவ்வாறாக, இதைப்பற்றி இங்கு நாம் வாசிக்கிறோம் –

### ஏசாயா 28:10

**"...கற்பனையின்மேல் கற்பனையும், கற்பனையின்மேல் கற்பனையும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், பிரமாணத்தின்மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமுமாம் ...."**

இந்த இரண்டு ஆகமங்களும் கூர்மையான பட்டயத்தின் இருபுறத்தைக் கொண்டுள்ளது....

### எசேக்கியேல் 21:9

**" .... பட்டயம் கூர்மையாக்கப்பட்டது, பட்டயம் கூர்மையாக்கப்பட்டது..... என்று கர்த்தர் உரைக்கிறார்....."**

இந்தச் சுவிசேஷ யுகத்தில் வாழும் அனைத்து மனிதர்களுக்கும் விசேஷமாக விசுவாசக் குடும்பத்திற்கும் இந்த இரண்டு ஆகமங்களும் மிகவும் முக்கியமானவைகளாகும். இதன் மூலமே இரட்சிப்பைச் சுதந்தரித்துக் கொள்ள முடியும். இந்த இரட்சிப்பு கிறிஸ்து இயேசுவின் மூலம் மட்டுமே வரும்.

மீண்டுமாக....வாசிக்கலாம்....

### சகரியா 4:11 –14

**" பின்பு நான் அவரை நோக்கி: குத்துவிளக்குக்கு வலதுபுறமாகவும் அதற்கு இடதுபுறமாகவும் இருக்கிற இந்த இரண்டு ஒலிவமரங்கள் என்னவென்று கேட்டேன். மறுபடியும் நான் அவரை நோக்கி: இரண்டு பொற்குழாய்களின் வழியாய்த் தொங்கி, பொன்னிறமான எண்ணெயைத் தங்களிலிருந்து இறங்கப்பண்ணுகிறவைகளாகிய ஒலிவமரங்களின் இரண்டு கிளைகள் என்னவென்று கேட்டேன். அதற்கு அவர்: இவைகள் இன்னதென்று உனக்குத் தெரியாதா என்றார்; ஆண்டவனே, எனக்குத் தெரியாது என்றேன். அப்பொழுது அவர்: இவைகள் இரண்டும் சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள் என்றார்."**

ஆம்! பிரியமானவர்களே! "**ஒலிவமரத்தில்**" இருந்து இரண்டு "**பொற்குழாய்களின்**" வழியாய் "**பொன்னிறமான எண்ணெயானது**" பொற்கிண்ணத்திற்கு இறங்கி, பின்னர் அதிலிருந்து ஏழு **குழாய்களின்**" வழியாக ஏழு அகல்கள் ஒவ்வொன்றிற்கும் செல்லும்படியாக உச்சியில் "**பொற்கிண்ணத்தைப்**" பெற்றிருக்கும் பொன்னினால் செய்யப்பட்ட ஏழு கிளைகளைக் கொண்ட "**குத்துவிளக்கைப்**" பற்றிய தரிசனமாகும்!



இரண்டு ஒலிவ மரங்கள் எண்ணெயைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறது. இதில் சொல்லப்பட்ட இரண்டு ஒலிவ மரங்களும் இரண்டு ஆகமங்களைக் குறிக்கிறது. அதாவது புதிய ஏற்பாடு மற்றும் பழைய ஏற்பாடு என்பவைகளாகும். பொற்கிண்ணம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. ஏழுகிளைகளைக் கொண்ட குத்துவிளக்கு ஏழு கால கட்ட / ஏழு விதமாகப் பிரிக்கப்பட்ட சபையைக் குறிக்கிறது. குத்து விளக்கிற்கு மேலாக பொற்கிண்ணம் உயர்த்தப்பட்டு இருக்கும் போது இது கிறிஸ்துவை எல்லாவற்றிற்கும் தலையாக வைத்துள்ளார் என்பதையும் காட்டுகிறது. ஏழுகுழாய்கள் (கிண்ணத்தில் உள்ளவை) ஏழுகால தூதர்களைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்துவும்,“ **நான் உலகத்திற்கு வெளிச்சமாக இருக்கிறேன் நீங்களும் வெளிச்சமாக இருங்கள்** ” என்று சொன்னதை ஞாபகத்தில் வைப்போம். மேலும், தேவனுடைய பரலோக இராஜ்யத்தில் நாம்(கர்த்தர் மற்றும் சபை) ஒன்று சேரும் போது அது மிகப்பெரிய மகத்தான வெளிச்சமாக பிரகாசிக்கும்.

ஆ! நிச்சயமாக, இது இரண்டு ஏற்பாடுகளின் மூலம் வெளிப்படுத்தப்படும் தேவனுடைய வார்த்தையானது எவ்வாறு ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல்

மூலமாக சுவிசேஷ யுக இரட்சிப்பை வெளிப்படுத்துகிறது என்பதைக் குறிக்கிறது!

## 4) 2 தீமோத்தேயு 2:15

**"…..சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும்….."**

ஆ! இது சத்தியத்தை ஆதாயப்படுத்துவதற்காகப் புரிந்து கொள்ளப்பட்டு கவனமாக அடையாளங் காணப்பட வேண்டிய, தேவனுடைய வார்த்தையில் பயன்படுத்தப்படும் பாஷையின் வகைளைப் புரிந்துகொள்வதோடு தொடர்புடையதாகும்!

ஆம்! நிதானமாய்ப் பகுத்துப் போதித்தல்!

இந்தப் பாஷைகளின் வகைகள் பல உள்ளன –

- **நேரடி பாஷை** *(Literal Language)*
- **உவமை பாஷை** *(Parabolic Language)*
- **அடையாள பாஷை** *(Symbolic Language)*
- **மறைக்கப்பட்ட பாஷை** *(Obscure Language)*
- **தொடர் உருவக பாஷை** *(Allegorical Language)*
- **நிழல்களும் பொருள்களும்** *(Types and Anti-types)*

முதல் மூன்று பாஷைகளின் வகைகளானது மிகவும் பொதுவாக அறியப்பட்டவைகள் என்பதால், அவைகளைப் பற்றி நாம் விளக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், அடுத்த மூன்றைப் பற்றிச் சுருக்கமாக விளக்க வேண்டியிருக்கிறது!!

### மறைக்கப்பட்ட பாஷை *(Obscure Language)*

மறைக்கப்பட்ட பாஷை (*Obscure Language*) என்பது சில வசனங்களில் சில வார்த்தைகள் இல்லாதபோது, அந்த வசனங்களின் உண்மையான முக்கியத்துவத்தை மறைக்க உதவுகின்ற, ஒரு முறையை வேத வசனங்களில் பயன்படுத்துவதாகும்!

இதனை இரண்டு உதாரணங்கள் மூலம் நாம் புரிந்துகொள்ளலாம் வாருங்கள் –

உதாரணங்கள் :

**# 1) 1 கொரிந்தியர் 15:22**

**"....ஆதாமுக்குள் எல்லாரும் (எல்லா ஆத்துமாக்களும்) மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் (எல்லா ஆத்துமாக்களும்) உயிர்ப்பிக்கப்படுவார்கள்..."**

இது கிறிஸ்துவை "**ஏற்றுக்கொள்வதன்**" மூலமாக மாத்திரமே **முழு மனுக்குலத்துக்கும்** உயிர்த்தெழுதல் பற்றிய ஒரு நம்பிக்கை இருக்க முடியும் என்பதைக் குறிக்கப் பெயரளவிலான கிறிஸ்தவர்களால் பயன்படுத்தப்படும் ஒரு புகழ்பெற்ற வேத வசனமாகும்!

ஆனால்..... அந்த இரண்டு இடங்களில் "**ஆத்துமாக்கள்**" என்கிற வார்த்தை இல்லாதது மாபெரும் சத்தியத்தை மறைக்கின்றது!

இதுவே மறைக்கப்பட்ட பாஷையாம்!

**# 2) 1 யோவான் 5:12**

**"...குமாரனை (குமாரனின் சாயலை) உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் (குமாரனின் சாயல்) இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்...."**

ஆமாம்! இந்த மறைக்கப்பட்ட பாஷையின் மற்றொரு உதாரணம்!

"**சாயலின்**" அல்லது **குணலட்சண ஒப்புமையின்** குறிப்பானது, அதனை அடைய முயற்சிகளை நீண்ட காலத்திற்கு மேற்கொள்ளுதலை உள்ளடக்கியிருக்கிறது!

–ஆமாம்! **"..உடையவன்..."**

அடுத்ததாக....

**தொடர் உருவக பாஷை** *(Allegorical Language)*

அப்போஸ்தலர் பவுல் இதைப்பற்றிய கீழுள்ள வசனத்திற்கு நமது கவனத்தை ஈர்க்கிறார் –

**கலாத்தியர் 4:24 (வாசிக்கவும்)**

**" ....இவைகள் ஞான அர்த்தமுள்ளவைகள் (திருவிவிலியம் – தொடர் உருவகம்);**

**அந்த ஸ்திரீகள் இரண்டு ஏற்பாடுகளாம்; ஒன்று சீனாய்மலையிலுண்டான ஏற்பாடு, அது அடிமைத்தனத்திற்குள்ளாகப் பிள்ளைபெறுகிறது, அது ஆகார் என்பவள்தானே."**

இங்கே வசனம் 22 முதல் 31 வரை, ஆபிரகாமும் அவருடைய இரண்டு மனைவிகளும் அவர்களுடைய **இரண்டு பிள்ளைகளும்** ஒரு தொடர் உருவகம் என்பதை அப்போஸ்தலர் சுட்டிக்காட்டுகிறார் !!

சகோ. ரசல் "**தொடர் உருவகம்**" பற்றி விரிவாக்கப்பட்ட விவிலிய கருத்துரைகளில் – (பக்கம் 388 – இல்) இவ்வாறு எழுதியிருக்கிறார் :–

( "**தொடர் உருவகம்**" என்பது)

- "தேவன் கொடுத்த ஒரு உருவம் அல்லது படம் (சித்திரம்)" **(Q.B. 165/ R1389)**
- "பொதுவான கொள்கைகளுக்கு மாத்திரமான ஒரு படம் (சித்திரம்) – ஒவ்வொரு அம்சமும் குறிப்பிடப்பட்டிருக்காது." **(R57)**
- "இந்தச் சுவிசேஷ யுகத்தினுடைய கர்த்தரின் ஜனங்களுக்குப் பொருந்தக்கூடிய மாபெரும் சத்தியங்களைக் குறிக்கும் ஒரு வார்த்தையின் படம் (சித்திரம்)." **(R2777 / ஹார்வெஸ்ட் க்ளீனிங்ஸ் / Harvest Gleanings 380)**

ஆம்! ஒரு **தொடர் உருவகம்** (Allegorical Language) என்பது ஒரு நிழலுடன் தோற்றத்தில் மிக நெருக்கமாக இருக்கும்... அதேசமயம்.... அது ஓர் உவமை என்பதிலிருந்து வேறுபடுகிறது..... எவ்வாறெனில்...

ஓர் **உவமை** என்பது ஒரு **கற்பனையான** கதையாகும், உவமையின் நோக்கத்தை வெளிப்படுத்துகிறதான ஓர் அர்த்தத்தை அது தனக்குளே கொண்டிருக்கும். இயேசு தம்முடைய முதலாம் வருகையின்போது தமது பெரும்பாலான போதனைகளை இந்த வகையில்தான் பேசினார்! **(மத்தேயு 13:34)**

மறுபுறம் பார்க்கையில் ஒரு **தொடர் உருவகம்** என்பது ஒரு **வரலாற்றுப்** பார்வையில், **உண்மையான நிகழ்வுகளின் பதிவு** செய்யப்பட்ட பத்தியாகும், இது ஓர் ஆழமான பொருளின் மூலம் ஒரு வெளிப்பாட்டைத் தனக்குள் மறைத்து வைத்திருக்கிறது!

**தொடர் உருவகங்களுக்கான உதாரணங்கள்!**

- யோபுவின் முதலாம் அதிகாரமும் மற்றும் தேவனுக்கும் சாத்தானுக்குமிடையிலான சம்பாஷணைகளும்
- அப்போஸ்தலருடைய நடபடிகள் 27 –ஆம் அதிகாரம் முழுவதும்
- மாற்கு 10: 13-15 –ல் இயேசு சிறு பிள்ளைகளை ஆசீர்வதிப்பதற்காக தன்னகத்தே ஏற்றுக்கொண்டு அவர் பேசின வார்த்தை... மேலும் வேத வசனங்களிலுள்ள பலர்!

அடுத்ததாக....

**நிழல்களும் பொருள்களும்** *(Types and Anti-types)*

மீண்டும் அப்போஸ்தலர் பவுலே இதைப்பற்றிய கீழுள்ள வசனத்திற்கு நமது கவனத்தை ஈர்க்கிறார்.

**1 கொரிந்தியர் 10:6 (வாசிக்கவும்)**

**“...இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது...”**

(“ டூப்பாஸ் (**tupos**) ”**G5179** – நிழல்)

ஆமாம்! அகராதியில் “ **டூப்போஸ்** ” என்கிற கிரேக்க வார்த்தையின் இன் அர்த்தத்தை இவ்வாறாக நாம் வாசிக்கலாம்...

“ஓர் உபதேச அர்த்தத்தில் – ஒரு நிழலை, அதாவது ஒரு **எதிர்காலத்திற்குரிய (மேசியா சம்பந்தப்பட்ட)** நபர் அல்லது விஷயத்தை முன்னடையாளமாகக் காட்டும் நபரையோ அல்லது விஷயத்தையோ குறிக்கிறதாக இருக்கிறது!”

மீண்டும், அதே அப்போஸ்தலர், “ **நிழல்கள்** ” என்னும் இந்தக் கருத்துக்களுக்குத் தெளிவான வரையறையை நமக்குக் கீழுள்ள வசனத்தில் தருகிறார்

**எபிரெயர் 10:1 (வாசிக்கவும்)**

**“ இப்படியிருக்க, நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய்மாத்திரம் இருக்கிறபடியால், வருஷந்தோறும் இடைவிடாமல் செலுத்தப்பட்டுவருகிற ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது.”**

இங்கே அவர் நிழலான **" பாவ நிவாரண நாள் "** மற்றும் அதன் பலிகளானது (வசனம் 4) **நிஜத்திற்கு** மாறாக இருப்பதாகப் பேசுகிறார்... அதாவது **அதன் பொருள்!**

மெய்தான்! நியாயப்பிரமாணம் இந்த மாதிரியான பல **" நிழல்களைக் "** கொண்டிருந்தது.

உதாரணத்திற்கு முதன்முதலில் கொடுக்கப்பட்ட பிரமாணம்!

**யாத்திராகமம் 12:14 (வாசிக்கவும்)**

**" அந்த நாள் உங்களுக்கு நினைவுகூருதலான நாளாய் இருக்கக்கடவது; அதைக் கர்த்தருக்குப் பண்டிகையாக ஆசரிப்பீர்களாக; அதை... நித்திய நியமமாக ஆசரிக்கக்கடவீர்கள். "**

ஆமாம்! **" பஸ்கா "** (பெசாக் (Pesach) – எபிரெய பதம்) அதன் அனைத்து விவரங்களும் ... மற்றும் அதின் **" பழுதற்ற ஆட்டுக்குட்டியும் "** ஓர் அழகான நிழலாக இருந்தது!

அதேபோல தான் .... **யூபிலி, ஓய்வுநாள்** போன்றவைகளும் இருந்தன!

ஆகவே, **" ஜீவனைக் கொடுக்கும் " சத்தியத்தையைப் பெறுவதற்கு எழுதப்பட்ட வார்த்தைகளான தேவனுடைய வார்த்தையைச் செயல்முறைப்படுத்த வேண்டிய அவசியம்** இருப்பதை நாம் காண்கிறோம்!

– இஸ்ரயேல் தேசத்துக்கும், இந்த உலக மனுக்குலத்திற்கும் அவர்களின் இரட்சணியக் காலத்தில், இந்த **" செயல்முறை "** அவர்களுக்காக நடக்கும், இதைபற்றி நாம் வாசிக்கிறோம் –

**வெளிப்படுத்தல் 20:12**

**" .....அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன..... "**

ஆம்! இந்த வார்த்தைகளும் **" அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன "** என்பதும் **" புஸ்தகமான "** தேவனுடைய வார்த்தையின் **" செயலாக்கம் "** என்னும் இந்தச் **" செயல்முறையானது "** குறித்த விஷயத்தைக் குறிக்கிறது.

# 5. "மன்னா" தூதர்களின் அப்பம் எனக் குறிப்பிடப்படுகிறது

## (The Manna is referred to as "Angel's Food")

இதைப்பற்றி நாம் வாசிக்கிறோம் –

**சங்கீதம் 78: 23-25**

**" ....மன்னாவை அவர்களுக்கு ஆகாரமாக வருஷிக்கப்பண்ணி, வானத்தின் தானியத்தை அவர்களுக்குக் கொடுத்தார். தூதர்களின் அப்பத்தை மனுஷன் சாப்பிட்டான்:...."**

இந்த விஷயத்தைப் பற்றி எழுதிய அப்போஸ்தலர் பவுல், இவ்வாறாக விவரிக்கிறார் –

**1 கொரிந்தியர் 10:3**

**" எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள்."**

நேரடியான அர்த்தத்தில், இந்தத் " **தூதர்களின் அப்பத்தை**..." வனாந்திரத்தில் அவர்களின் உணவாக வழங்குவது என்பதைத் தேவனுடைய அற்புதமானப் பராமரிப்பாக நாம் புரிந்துகொள்கிறோம்.

– இங்கே "**தானியம்**" பற்றிய குறிப்பு.... இந்த மன்னா ஒரு தானியமாக இருப்பதை மீண்டும் வலியுறுத்துகிறது!

– இது உரையாசிரியர் கில் அவர்கள் சொல்வதுபோல் இருந்தது ("**My Sword**" செயலி)

"...இஸ்ரயேலர்களுக்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட உணவானது...." அவர்களுக்கான ஏற்பாடும், அவர்களுக்கான நியமிக்கப்பட்ட பங்குமாகும், அது அனுதினமும் அவர்களுக்காக ஓர் அளவு எனப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இவ்வாறு பார்க்கையில், இது ஆவிக்குரிய ரீதியில் எதனை அடையாளப்படுத்துகின்றதாயுள்ளது?

மன்னா என்பது " **ஞானபோஜனம்** " என்று **1 கொரிந்தியர் 10: 3** – இல் உள்ள அப்போஸ்தலர் பவுலின் வார்த்தைகளிலிருந்தும் .... மற்றும் அது " **தூதர்களின் அப்பம்** " என்கிற வார்த்தைகளிலிருந்தும் நாம் பரிந்துரைப்பது யாதெனில்.... இந்த விஷயத்தை நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் வார்த்தைகளில் புரிந்துகொள்ளக் சுட்டிக்காட்டுகிறது என்பதாகும் –

**யோவான் 6:63**

**" ....நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது....."**

ஆம்! மன்னா அல்லது " **தேவனுடைய வார்த்தையே...** "
" **ஆவியாய்** " இருக்கிறது!
மெய்தான்!

" **ஆவி** " என்றால் என்ன என்பதைப் பற்றி நாம் வேத வசனங்களில் வாசித்திருக்கிறோம் –

**பிரசங்கி 12:7**

**" ...ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகும்...."**

ஆம்! " **ஜீவசுவாசம்** " ஆகும் (ஆதியாகமம் 2:7)

**தானியேல் 2:1**

**" ..... அதினால், அவனுடைய ஆவி கலங்கி ..."**

ஆம்! " **சிந்தை** " ஆகும்!

மெய்தான்! இவை அனைத்தும் கண்ணுக்குத் தெரியாத மற்றும் சக்திவாய்ந்த காரியங்களைக் குறிக்கின்றன!

**– அவ்வாறே வார்த்தைகளும்கூட இருக்கின்றன!**

– இன்னும் விசேஷமாக " **தேவனுடைய வார்தைகளும்** " அவ்வாறே இருக்கின்றன!

– மெய்தான், வார்த்தை எவ்வளவு வல்லமை வாய்ந்தது என்பதைப் பற்றிக் காணலாம்

**எபிரெயர் 4:12**

**" தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும்,**


**கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.”**

இங்கே கேட்போரின் சிந்தை, எண்ணங்கள் மற்றும் இருதயம் ஆகியவற்றின் ஆழம் வரை ஊடுருவுகின்ற தேவனுடைய வார்த்தைக்கு இருக்கிற இந்த மாபெரும் கண்ணுக்குத் தெரியாத வல்லமையைப் பற்றி அப்போஸ்தலர் விவரிக்கிறதைக் காண்கிறோம்.



ஆம்! நாம் எல்லோரும் அமர்ந்து அவருடைய வார்த்தைகளைக் கேட்கும்போது, நம்முடைய சிந்தைக்குள்ளும், இருதயத்திற்குள்ளும் எவ்விதம் வசனங்கள் ஆழமாக ஊடுருவுகின்றது என்பது நாம் அறிந்ததே. சில நேரங்களில் நம்முடைய உள்ளத்திற்குள் மறைந்திருக்கும் இரகசியங்களையும் அப்படியே வெளியே கொண்டு வந்துவிடுகிறது.

சில நேரங்களில் நமக்கான குழப்பங்களுக்கு, கேள்விகளுக்கு சடிதியாய் பதில்கள் கிடைக்கும். சிலர் கடினமான– கடிந்து கொள்ளுதலுக்குள் கடந்து செல்வார்கள். சிலரின் நொறுங்குண்ட இருதயத்திற்கு ஆச்சரியமான ஆறுதலை அளிக்கும் வண்ணமாகவும் அவைகள் இருக்கின்றன.



ஆம்! தேவனுடைய வார்த்தைகள் கண்ணுக்குத் தெரியாததாக இருந்தாலும் வல்லமையுள்ளதாக இருக்கிறது. இதுவே **(மன்னா) பரலோக ஆகாரம், தேவதூதர்களின் ஆகாரம்** என்று சொல்லப்படுகிறது.

ஏனெனில் பரலோகத்தின் தேவனே இந்த ஆகாரத்தை நமக்கு கொடுத்திருக்கிறார். இது அவருடைய பரிசுத்த ஆவியின் மூலமாய் நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மாம்சீக இஸ்ரயேலர்களின் மன்னா மற்றும் அவர்களின் வாழ்க்கை, ஆவிக்குரிய இஸ்ரவேலர்களாகிய நமக்கு நிழலாக இருக்கிறது. தேவன் நம்மை (உலகமாகிய) எகிப்திலிருந்து விடுதலையாக்கி இருக்கிறார். நாம் (பாவத்தில்) அடிமைகளாக இருந்தோம். இந்தப் பாவ மற்றும்

மரண வழியிலிருந்து விடுதலை செய்து, நமக்கு நிஜமான மோசேவாகிய கர்த்தர் இயேசுவைக் கொண்டு, வனாந்திரமான இந்த உலகத்தை விட்டு, உடன்படிக்கையின் வழியாக, நம்மைப் பரம கானானுக்கு அழைத்து செல்கிறார்.

இந்தச் சுவிசேஷயுகத்தில் இவ்வளவு பெரிதான இரட்சிப்பு, புதுசிருஷ்டிகளுக்குக் கிடைத்திருக்கிறது. இந்த இரட்சிப்பிற்காகத் தேவன் செய்திருக்கும் ஒரு விசேஷித்த ஏற்பாடுதான் பரலோக ஆகாரம் – வார்த்தை ஆகும்.
இதை அவர் பரிசுத்த ஆவியின் மூலமாக, ஆவியில் ஜெநிபிக்கப்பட்ட ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் வளர்ச்சிக்கு ஏற்ப கொடுக்கின்றார்.

**இது நமக்கு ஜீவனையும் சந்தோஷத்தையும் கொடுக்கின்றது.**

இதைப்பற்றி வாசிக்கலாம் –

**எரேமியா 15:16**

**“ ....உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது....”**

புது சிருஷ்டிக்கான இந்த ஆவிக்குரிய போஜனத்தைப் பற்றிய வேறொரு படத்தைக் கீழுள்ள வசனத்தில் காண்கிறோம்.

**வெளிப்படுத்தல் 10:10**

**“ நான் அந்தச் சிறு புஸ்தகத்தைத் தூதனுடைய கையிலிருந்து வாங்கி, அதைப் புசித்தேன்; என் வாய்க்கு அதுதேனைப்போல மதுரமாயிருந்தது; நான் அதைப் புசித்தவுடனே என் வயிறு கசப்பாயிற்று.”**

ஆ! ஆம்! தேவனுடைய வார்த்தை

**“...அறுவடைச் செய்தியாக...”**

லவோதிக்கேயா சபைக் காலக்கட்டத்தின் புது சிருஷ்டிக்கான

“ **போஜனமாக**” வெளிப்படுகிறது!

பின்னர், நமக்கு இருப்பது –

## 6. இயேசு தம்மை "மன்னாவுடன்" ஒப்பிடுதல்!

**( Jesus Comparing himself to the "Manna" )**

இதைப்பற்றி நாம் வாசிக்கிறோம் –

**யோவான் 6: 32, 33**

**"இயேசு அவர்களை நோக்கி: வானத்திலிருந்து வந்த அப்பத்தை மோசே உங்களுக்குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம் என்றார்."**

மீண்டுமாக...


**யோவான் 6:49-51**

**".... உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள்.... நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்:.... நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே...."**

இங்கே இயேசு தம்மை மன்னாவுடன் தெளிவாக ஒப்பிடுவதைக் காணமுடிகிறது. ஆனால் (யோவான் 6:49-இன் படி பார்க்கையில்) அவர் இரண்டு மன்னாக்களைப் பற்றிப் பேசுகிறார் என்பதைக் கவனிக்க வேண்டும். ஏனெனில், பூர்வத்தில் பிதாக்கள் வனாந்தரத்திலே அவர்களின் ஜீவனுக்கான ஆதாரமாகப் புசித்த மன்னாவானது இறுதியில் அவர்களை மரணத்திற்கு வழிவகுத்தது.

ஆனால், அவர் தம்மை ஒரு வித்தியாசமான ஜீவனின் அதாவது நித்திய ஜீவனின் ஆதாரமாகச் சுட்டிக்காட்டுகிறார். தேவனால் கொடுக்கப்பட்டதும், பரலோகத்திலிருந்து வந்ததும் என்று அவர் கூறின, மன்னாவைப் போலவே, அதாவது, சொல்லப்போனால், தாமும் தேவனிடமிருந்து வந்தவர் என்றே கூறினார். (யோவான் 8:42)

அதாவது, இவ்வாறு அவர் பரத்திலிருந்திறங்கியும் வந்தார்! என்பதற்கான சான்றினை (யோவான் 8:23)-இல் பார்க்கலாம்.....




## இது எதனை குறிக்கிறது?

நிச்சயமாக, இது எவ்வாறு தேவன் தமது நேசகுமாரனான இயேசுவை “**நித்திய ஜீவனின்**” ஆதாரமாக “**தந்தருளினார்**” மற்றும் “**அனுப்பினார்**” என்பதற்கான குறிப்பாகும். இதைப்பற்றி நாம் வாசிக்கலாம் –

**யோவான் 3:16, 17**

“.... தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்... உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்....”



**மேலும் தேவன் தமது குமாரன் மூலம் இந்த இரட்சிப்பை மனுக்குலத்திற்கு எவ்வாறு தருகிறார்?**

அதைப்பற்றி நாம் வாசிக்கிறோம் –

**ஓசியா 13:14**

“.....அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்; அவர்களை மரணத்துக்கு நீங்கலாக்கி விடுவிப்பேன்...”

உண்மையில், தெய்வீக நீதியைப் பூர்த்தி செய்வதற்கான விலையாகவும் மனுக்குலத்தை மரணத்திலிருந்து மீட்கிறதற்காகவும் தமது

பரிபூரண மாம்சீக ஜீவனை மீட்கும்பொருளாக முதலாம் வருகையிலேயே கொடுத்திட்ட குமாரனைத் “**தந்தருளினதில்**” இந்த வேத வசனம் நிறைவேறியது!



(பாவநிவாரண நாளில் பிரதான ஆசாரியர் கிருபாசனத்தின் மீது “**தெளிக்கப்பட்ட**” இரத்தம் நினைவிருக்கிறதா? இதுவே இதனின் அடையாளக் குறிப்பாகும்.

ஆகவே இயேசு இந்த முழு சத்தியத்தையும் இந்த அற்புதமான வார்த்தைகளில் உள்ளடக்கியிருக்கிறார்.

**யோவான் 6:51**

**"…. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே…."**

ஆண்டவரின் இந்த வார்த்தைகளை நாம் கவனிக்க வேண்டும்.

**" ….நான் கொடுக்கும் அப்பம் (மன்னா) உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே…."**

ஆம்! "**நான் கொடுக்கும்**" என்ற வார்த்தைகளின் பயன்பாடு யாதெனில், கர்த்தர் இயேசுவிடமிருந்து உலகிற்கு வெளிப்படும் இந்த ஜீவனானது சிலுவையில் அவரது ஜீவனை "**மீட்கும் பொருளாகக் கொடுத்த**" பிறகு நிறைவேறும் என்பதைக் குறிக்கிறது!

இந்த ஜீவனானது ஏற்கனவே சுவிசேஷ யுகத்தின் "**இவ்வளவு பெரிதான இரட்சிப்பின்**" மூலம் அங்கிருந்தே வெளிப்பட்டுள்ளது என்பதையும்… மேலும் இராஜ்யத்தின் கண்ணுக்குத் தெரிகின்ற பாகத்தின் மீட்கும் வேலையிலும், நித்திய ஜீவனுக்கான உலக இரட்சிப்பினுடைய "**பெரும்பாதையைத்**" திறப்பதன் மூலமும் துவங்கும் உலக இரட்சிப்பிலும் அது வெளிப்படும் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்!

**(ஏசாயா 35: 8-10)**

ஆகவே, கர்த்தர் தம்மையும் தமது முதலாம் வருகையின் வேலையையும் "**மன்னா**" உடன் ஒப்பிட்டிருந்தார்!

நிறைவாக...


# 7. "மறைவான மன்னா" மற்றும் அதன் முக்கியத்துவம்

## ( "The Hidden Manna" and its Significance )

**வெளிப்படுத்தல் 2:17**

**" ....ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து ... "**

இது நிச்சயமாக அப்போஸ்தலர் பவுல் குறிப்பிடும் மூலமுதலான **ஆசரிப்புக்கூடாரத்தின்** ஏற்பாட்டைக் குறிக்கிறது.



## எபிரெயர் 9:4

**“ .....அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன...”**

உடன்படிக்கைப் பெட்டியிலுள்ள இந்த மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரம் அனுதினமும் வழங்கப்பட்ட பொதுவான மன்னாவைப் போலன்றி அழியாதிருந்தது!



நிச்சயமாக, இந்த மன்னாவை கெட்டுப்போகாமலும் பத்திரமாகவும் அப்படியே வைத்திருக்க அற்புதமான தெய்வீக வல்லமை பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்!

உண்மையில், நாம் வாசிக்கும் இந்த வழிமுறைகளிலிருந்தே இது உருவானது,

## யாத்திராகமம் 16:33, 34

**“....மேலும், மோசே ஆரோனை நோக்கி: நீ ஒரு கலசத்தை எடுத்து, அதிலே ஒரு ஓமர் அளவு மன்னாவைப் போட்டு, அதை உங்கள் சந்ததியாருக்காகக் காப்பதற்குக் கர்த்தருடைய சந்நிதியிலே வை என்றான். கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அது காக்கப்படும்படி ஆரோன் அதைச் சாட்சி சந்நிதியில் வைத்தான்....”**

இப்போது, அந்த “**மன்னா**” – வானது... ஆசரிப்புக்கூடாரம் வெளிப்படுத்தப்பட்டு பின்னர் வெகுகாலம் கழித்துக் கட்டப்படுவதற்கு முன்.... துவக்கத்தில் ஒரு “ **மண் பானை**” யில் வைக்கப்பட்டு.... பின்னர் “ **பொற்பாத்திரத்திற்கு**” மாற்றப்பட்டிருக்கலாம் என்று நாங்கள் நினைக்கிறோம்.

**இவையனைத்தும் எதனை அடையாளப்படுத்துகிறது?**

யாத்திராகமம் 16:33 க்கான விளக்கவுரையில் **(EBC)** சகோ.ரசல் இவ்வாறு எழுதுகிறார் –

“ ....நமது ஆண்டவரின் மாம்சம் அழிவைக் காணவில்லை என்பதை அடையாளப்படுத்துவதாயும், மேலும் எல்லையற்ற அன்பு மற்றும் பரிபூரண கீழ்ப்படிதலின் நித்திய சாட்சியாக அது பாதுகாக்கப்பட்டிருக்கும் என்பதையும் குறிக்கிறது.... ” **(B130).**

ஆகவே, ஒருபோதும் கெட்டுப்போகாமல் “ **மண் கலசத்தில்** ” இருந்த நிஜமான ஓர் **ஓமர்** அளவிலான மன்னா என்பது “ **மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவைப்** ” **(1 தீமோத்தேயு 2:5)** பற்றிய குறிப்பு என்றும், “ **மாம்ச சரீரம்** ” என்பது இயேசு அவர்கள் பின்வரும் வசனத்தில் வெளிப்படுத்தியபடி மனுக்குலத்திற்கான தேவனுடைய அதிஉன்னதமான அன்பின் சாட்சி என்றும் நாங்கள் பரிந்துரைக்க விரும்புகிறோம்.

**யோவான் 3:16**

**“ ....தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்...”**

ஆமாம்! பாவம் மற்றும் விழுந்துபோன சீர்கெட்ட நிலையான “ **வனாந்திர** ” நிலையில் இருக்கும் மனுக்குலத்திற்கு “ **ஜீவனை** ” வழங்குவதற்கான ஒரு மாபெரும் அற்புதம் மற்றும் தேவனுடைய ஈவைப் பற்றி இங்கே கூறப்பட்டுள்ளது! ஏசாயா 14:17 (வாசிக்கவும்)

- தேவன் – **“...தம்முடைய ஒரேபேறான குமாரனைத் ... தந்தருளி....” (யோவான் 3:16)**
- தேவன் – **“ ...தம்முடைய குமாரனை அனுப்பினார்....” (கலாத்தியர் 4:4)**
- **அந்த வார்த்தை** யைத் தேவன் **“ ...மாம்சமாக்கினார்...” (யோவான் 1:14)**
- **“...அவர்களை நான் பாதாளத்தின் வல்லமைக்கு நீங்கலாக்கி மீட்பேன்...” (ஓசியா 13:14)** என்று தேவன் சொல்கிறார்.

இந்த ஜீவன் தரும் “ **மன்னாவைத்** ” “ **தந்தருளினதில்** ” என்னே ஒரு பிரம்மாண்டமான, பிரமிக்கத்தக்க, கற்பனை செய்யமுடியாத மற்றும் வியக்க வைக்கும் திவ்ய வல்லமை பயன்படுத்தப்பட்டிருக்கிறது!

**– தேவனுடைய வார்த்தை !**

**– தேவனுடைய ஒரேபேறான குமாரன் !**

–“ **மாம்சம்** ” ஆக மாறவும் “ **மனுஷனாகிய கிறிஸ்து இயேசுவாக** ” மாற **வானத்திலிருந்து இறங்கி வரவும்**

ஆமாம்!

**அல் மஷியாவானவர் (Al Mashiya), யெஹூவா (Yeshua)** ஆனார் !

பிரியமான சகோதர சகோதரிகளே! இந்த வல்லமையைப்பற்றி சற்றே சிந்தித்துப் பாருங்கள்!

**யோவான் 1:14**

**“...அந்த வார்த்தை மாம்சமாகி...”**

பரலோகத்தின் “ **ஆவிக்குரிய ஜீவியான** ” குமாரனானவர் “ **மாம்சீகச்** ” சுபாவத்துக்கு மறுரூபமாக்கப்பட வேண்டும்!

**இது எவ்வாறு நிறைவேற்றப்பட்டது?**

இது எப்படி நடந்தது? பரலோகத்தில் என்ன நடந்தது? தூதர்களின் பார்வை என்னவாக இருந்திருக்கும்? இந்தக் காரியத்தில், தேவனானவர் எவ்வாறு ஒரு சுபாவத்திலிருந்து மற்றொரு சுபாவத்திற்கு அவரை மாற்றினார்? இது தேவனுடைய திவ்விய வல்லமையாகும். வசனம் வாசிக்கலாம் –



**லூக்கா 1:35**

**“....பரிசுத்த ஆவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும்....”**

தெய்வீக வல்லமையானது, ஓர் அபூரண மரியாளின் கருவில், மாம்சீகச் சுபாவத்தில் தேவனுடைய பரிபூரண “ **பரிசுத்த** ” குமாரனின் கருத்தரிப்பில் கிரியைச் செய்தது!

மேலும், தொடர்ந்து அந்த வல்லமை செயல்பட்டவிதமாவது –

**மத்தேயு 2:10 – 14**

**“ .....அவர்கள் அந்த நட்சத்திரத்தைக் கண்ட போது....சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு.....அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப் போய்.... ”**

இங்கே சாத்தானும் மற்றும் அவனது கருவியான “ **பிள்ளையைக் கொலைசெய்யத் தேடின** ” ஏரோதின் அனைத்து முயற்சிகளையும் முறியடிக்க தெய்வீக வல்லமை பயன்படுத்தப்பட்டது.

மேலும் இந்தத் தெய்வீக வல்லமையானது

- **30** ஆண்டுக்காலப் பரிபூரண மாம்சீக ஜீவியம்
- **3½** ஆண்டுக்கால ஆவியினால் ஜநிப்பிக்கப்பட்ட புது சிருஷ்டியின் ஜீவியம்

- மேலும், காட்டிக்கொடுக்கப்படுதல், தவறான குற்றச்சாட்டுகள் மற்றும் சிலுவையில் அறையப்படுதல் ஆகியனவற்றின் மூலம் “ **அந்தகாரத்தின் அதிகாரத்தினுடைய** ” **(லூக்கா 22:53)** கைகளில் இருந்த அவரது பூமிக்குரிய ஜீவியத்தின் கடைசி 24 மணிநேரம்!

போன்ற பல தருணங்களின் ஊடாகவும் தொடர்ந்து செயல்பட்டதை நினைவுப்படுத்துகிறோம்.



பின்வரும் வார்த்தைகளை இயேசு கூறினபோது இவையனைத்தையும் அவர் மனதில் கொண்டிருந்தார்.

**யோவான் 6:48 – 51**

**" ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே....."**

ஆகவே, தேவனுடைய ஒரு மாபெரும் ஏற்றகாலப் பராமரிப்பான ஏற்பாடுதான் தேவனுடைய குமாரனும், உலக இரட்சகரும், மீட்பருமான **இயேசு** என்பதை மன்னா அடையாளப்படுத்தியதைக் காட்டுவதற்காகவே வனாந்தரத்தில் உள்ள இஸ்ரயேலர்களுக்கு ஜீவன் கொடுக்கும் ஆகாரத்தின் ஓர் அற்புதமான ஆதாரமாக இருந்த "**மன்னா**" – வானது தேவ கட்டளைப்படி அதில் கொஞ்சம் – "**ஓர் ஓமர்**" அளவிற்கு ஒரு சாட்சியாக ஒரு "**கலசத்தில்**" எடுத்து வைக்கப்பட்டது!!

"**அது கெட்டுப்போகவில்லை**" என்னும் கூற்றானது – எவ்வாறு இயேசுவின் "**மாம்சம்**" மரணத்திலும்கூட என்றென்றைக்கும் அழிவைக் காணவில்லை என்பதைக் குறிக்கிறது, இதைப் பற்றி வாசிக்கலாம் –

**அப்போஸ்தலர் 2:31**

**" ....அவருடைய மாம்சம் அழிவைக் காண்பதில்லை...."**

(சங்கீதம் 16:10 – இன் நிறைவேறுதலாகும்)

**(என் ஆத்துமாவைப் பாதாளத்தில் விடீர்; உம்முடைய பரிசுத்தவானை அழிவைக் காணவொட்டீர்.)**

**தேவன் இதனை எவ்வாறு செய்தார்?**

இதைப்பற்றி நாம் வாசிக்கிறோம் –

**யோவான் 20: 6 – 8**

**" ..... கண்டு விசுவாசித்தான்...."**

இந்த வசனத்தில் யோவான் கூறினதில் இரகசியம் இருக்கிறது. ஏனெனில் அந்தக் காலத்தில் அடக்கம்பண்ணுதல் என்பது – குகைகளில் நடந்தது. அதிலும்

இரண்டு விதமான அடக்கம்பண்ணும் முறையைப் பின்பற்றினார்கள். வெள்ளை நிறத் துணிகளில் கட்டி, வாசனைத் திரவியங்களிட்டு, பின்னர் அடக்கம் செய்தார்கள். துணிகளைக் கட்டுவதில், எகிப்தியருக்கும், இஸ்ரயேலருக்கும் இடையே வித்தியாசம் இருந்தது.

எகிப்தியர், இரண்டு கை – கால்களை முழுவதுமாக சுற்றிக்கட்டுவார்கள், பின்பு அடக்கம் செய்வார்கள். ஆனால் இஸ்ரயேலர்கள் தனித்தனியாக இடது கை, வலது கை, இடது கால், வலது கால் என்று கட்டி அடக்கம் செய்வார்கள். அதனால் தான் லாசருவை கர்த்தர் இயேசு எழுப்பும் போது அவர் எளிமையாக மேல் எழும்பி வந்தார். இல்லையென்றால் எகிப்தியர் முறைப்படி இருந்திருந்தால், வெறும் சத்தம் மட்டுமே வந்திருக்கும். இப்படியே இஸ்ரயேலர் கர்த்தர் இயேசுவை அடக்கம் செய்தார்கள்.

எனவே யோவான் அவரின் குகையில் பார்த்தது வெறும் துணிகள் மாத்திரமே, மேலும், அது எவ்வாறு கட்டப்பட்டிருந்ததோ, அதே நிலையிலேயே கட்டப்பட்டு மாத்திரம் இருந்தது. ஏனெனில், அந்தச் சரீரத்தை அப்படியே வேறு இடத்திற்கு மாற்றி விட்டார். இதை யோவான் புரிந்துகொண்டார்.

“ **கடைசி நாளுக்காகவும்,** ” பின்னர் இஸ்ரயேலில் என்றென்றும் வெளிப்படுத்துவதற்காகவும், மரித்து உயிர்த்த கர்த்தர் இயேசுவின் **மனிதச்** சரீரத்தைப் பாதுகாக்க தேவன் எடுத்துக் கொண்டுபோய்விட்டார். இதைப்பற்றி வாசிக்கலாம் –

**சகரியா 12:10**

**“....அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து....”**

ஆமாம்! அந்தச் “ **சரீரம்** ” நித்தியத்துக்கும் புதியதாகவே வைக்கப்பட்டிருக்கும்! (எபிரெயர் 10:5)

இதுதான் ஓர் “ **ஓமர்** ” அளவிலான “ **உங்கள் சந்ததியாருக்கு ஒரு சாட்சியாக** ” மண் கலசத்தில் வைக்கப்பட்ட மன்னாவின் முக்கியத்துவம் என நாங்கள் நம்புகிறோம்!!

ஆனால், சிறிது காலம் கழித்து, ஆசரிப்புக்கூடாரம் கட்டப்பட்டபோது, இந்த “ **மன்னா வைக்கப்பட்ட கலசம்** ” ஒரு “ **பொற்பாத்திரத்திற்கு** ” மாற்றப்பட்டது!

மன்னாவின் பொற்பாத்திரம் பற்றிய எந்தக் குறிப்பும் பழைய ஏற்பாட்டுப் பதிவுகளில் காணப்படவில்லை, ஆனால் புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் பவுல் இதைப்பற்றி சொல்கிறார்.

**எபிரெயர் 9:4**

**"...அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும் ....இருந்தன..."**

"**உங்கள் சந்ததியாருக்கு ஒரு சாட்சியாக**" வைத்திருக்க மோசே அறிவுறுத்திய அந்த அதே "**ஓமர் அளவிலான மன்னா**" இதுதான் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் ... இது முன்னர் ஒரு "**மண் கலசத்தில்**" இருந்ததாக நாங்கள் நம்புகிறோம்!

**அப்படியானால் இதன் முக்கியத்துவம் என்னவாக இருக்கும்?**

இதைப் பற்றிய கருத்துகளை நாம் சிந்திப்பதற்கு முன்பு, நாம் இப்போது வாசித்த எபிரெயர் 9: 4 – யின் வார்த்தைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்!

மகா பரிசுத்த ஸ்தலத்தின் திரையினிடத்திற்கும் அதற்கு முன்பாகவும் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்த இந்த

**– பொன்னாற்செய்த தூபகலசமானது**

இங்கே அது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு உள்ளே இருப்பதாகத் தோன்றுகிறது!!

**மாபெரும் குழப்பமான காரியமல்லவா!**

சகோ.ரசல் எழுதின விரிவாக்கப்பட்ட விவிலிய கருத்துரைகள் (ஆங்கிலத்தில் பக்கம் 609) – இல் ஒரு தெளிவு கிடைக்கிறது


" ...பொன்னாற்செய்த பலிபீடம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்க முடியாது. ஒன்று, அப்போஸ்தலர் வாய்தவறி அப்படிக் கூறியிருக்கலாம் அல்லது அவரது படியெடுக்கும் செயலாளர் (செயலாளர் / எழுத்தாளர்) தவறான வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கலாம், அதாவது திரைக்குப் பின்னால் என்பதற்குப் பதிலாக திரைக்கு முன்பு என்று பயன்படுத்தியிருக்கலாம்...." **(CR275:5; Q-28)**



டயக்லாட்டில் வசனம்–2 க்கு ஓர் அடிக்குறிப்பு – வத்திக்கான் **MSS** இல் ஒரு தேர்வைப் (திருத்தம்) பற்றி பேசுகிறது,

மேலும், இவ்வாறு அது கூறுகிறது

**"...ஆசரிப்புக்கூடாரம் முதன்முதலில் தயாரிக்கப்பட்டது அதில் குத்துவிளக்கு மற்றும் மேஜை, மற்றும் சமுகத்து அப்பங்கள் மற்றும் தூப பொற்பீடம் ஆகிய இரண்டும் இருந்தது; அதற்கு 'பரிசுத்த ஸ்தலம்' என்று பெயரிடப்பட்டுள்ளது..."**



ஆசரிப்புக்கூடாரம் கட்டப்பட்டபோது உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட வேண்டிய மன்னா ஒரு " **பொற்பாத்திரத்திற்கு** " மாற்றப்படுவதன் முக்கியத்துவத்தைப் பற்றிய கருத்துகளுக்கு மீண்டும் நாம் இப்போது வரலாம்.

இதை ஆராயும்போது, "**மண்கலசத்திலிருந்த மன்னா – பொற்பாத்திரத்திற்கு** " மாற்றப்பட்டது என்பது எதைக் குறிக்கிறது என்றால், கர்த்தர் இயேசு அவர் பலியின் வேலையை முடித்த பிறபாடு " **புது சிருஷ்டியாக**;" தேவன் அவருக்கு தந்திட்ட "**திவ்விய சுபாவத்தைக்**" குறிக்கிறது. இப்படியாக தேவனுடைய சித்தம் (அ) திட்டம் கிறிஸ்துவுக்காக இருந்ததை நாம் ஒரு வசனத்தில் வாசிக்கலாம் –

**யோவான் 5:26**

**“ ....ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்.... ”**

**எனவே, மண் கலசத்தில் உள்ள மன்னாவானது, உலகின் இரட்சகர் ‘மனிதனாகிய கிறிஸ்து இயேசுவின்’ ‘மாம்சத்தின்’ அழியாமையைக் குறிக்கிறது**

**‘பொற்பாத்திரத்தில்’ உள்ள மன்னாவானது, உலகின் இரட்சகராக திவ்ய சுபாவத்தில் இருக்கும் அதி உன்னதத்திற்கு உயர்த்தப்பட்ட கிறிஸ்துவின் அழியாமையைக் குறிக்கிறது !!**

மன்னாவின் இந்தப் “ **பொற்பாத்திரமானது,** ” உடன்படிக்கைப் பெட்டியின் உள்ளே மறைத்து வைக்கப்பட்டிருந்தது மற்றும் பழைய ஏற்பாட்டுப் பதிவுகளில் எந்தக் குறிப்புகளும் இல்லை என்னும் கூற்றானது நன்றாக கிறிஸ்துவின் “ **இரகசியத்தைக்** ” குறிக்கக்கூடும். இதைப்பற்றி நாம் வாசிக்கலாம் –

**ரோமர் 16:25,26**

**“ ....ஆதிகாலமுதல் அடக்கமாயிருந்து, இப்பொழுது தீர்க்கதரிசன ஆகமங்களினாலே அநாதி தேவனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும், சகல ஜாதிகளும் விசுவாசத்திற்குக் கீழ்ப்படியும்படிக்கு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுமாயிருக்கிற இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான....”**

மெய்தான்! பிரியமானவர்களே! அதி உன்னதத்திற்கு உயர்த்தப்பட்ட புது சிருஷ்டியான “ **கிறிஸ்து** ” மற்றும் ... “ **இவ்வளவு பெரிதான இரட்சிப்பு** ” என்னும் இந்த ‘மன்னா’வானது யூதர்கள், பெரும்பான்மையான கிறிஸ்தவர்கள் ... மற்றும் உலக மனுக்குலத்தின் “ **கண்களுக்குப்** ” பெரும்பாலும் மறைக்கப்பட்டுள்ளது!

**நம்முடைய மனக்கண்கள் திறக்கப்பட்டுள்ளதால் நாம் இப்பொழுது இதை காண்கிறோம் !**

இப்போது, ‘மறைவான மன்னா’ குறித்து எஜமானரின் வார்த்தைகளுக்கு வரலாம்.



**வெளிப்படுத்தல் 2:17**

**" .....ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக்கொடுத்து....."**

இந்த வார்த்தைகளுக்கான பொதுவான கருத்து என்னவென்றால், சபைக்கு...

**அழியாமை, திவ்ய சுபாவம்**

போன்ற பரிசுகள் வழங்கப்படுகின்றன என்பதாகும்!

இது மிகவும் உண்மையானது!

ஆனால், நாம் இன்னும் ஆழமாக பார்க்க விரும்புவோம் !!

ஆமாம், இந்த " **மறைவான மன்னாவை** " ஆண்டவரிடமிருந்து உண்மையில் **புசித்திட்ட** ஒருவரின் வார்த்தைகளிலிருந்து இப்போது நம்முடைய படிப்பினைகளைக் கற்றுக்கொள்கிறோம்!

ஆ, ஆமாம்! நம்முடைய அப்போஸ்தலராகிய பவுல் தான்!

இதைப்பற்றி நாம் வாசிக்கலாம் –

**பிலிப்பியர் 3:10-11**

**"......இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்....."**

இந்த வசனங்களுக்கான விவிலிய கருத்துக்கள் **EBC** – இன் 488/489 பக்கங்களில் காணப்படுகின்றன. அதைப் படிக்க நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்!

ஆனால் இங்கே அப்போஸ்தலரின் எண்ணங்களை நாம் பகுப்பாய்வு செய்யும்போது,.... நாங்கள் பரிந்துரைக்க விரும்புகிறது யாதெனில்....

அப்போஸ்தலர்,

வசனம்11 – இல் " **மறைவான மன்னாவை** " " **மரித்தோரின் உயிர்த்தெழுதல்** " என்று பேசுகிறார்

...ஆனால்

வசனம்10 – இல் அதை வழங்குவதாக வாக்களிக்கும் எஜமானான இயேசுவிடமிருந்து அதை எவ்வாறு பெறுவது என்பதைப்பற்றியும் அவர் பேசுகிறார்!

வசனம்10 – இல் அந்தக் கருத்துகளைப் படிக்கும்போது, அவற்றின் அர்த்தத்தினுடைய ஆழங்களை
– அதாவது, ஆவிக்குரிய ஆழங்களைக் காண்கிறோம்!

அப்போஸ்தலர் சுட்டிக்காட்டும் நான்கு பகுதிகள் உள்ளன!

அவையனைத்துமே, "**அறிகிறதற்கும்**" மற்றும் எஜமானருக்கும் அவர் விட்டுச்சென்ற "**மாதிரிக்கும்**" தொடர்புடையது (1 பேதுரு 2:21).

அவற்றைப்பற்றி இப்போது சுருக்கமாகப் பார்க்கலாம் வாருங்கள்:

முதலாவதாக –

## 1) அவரை அறிகிறதற்கும்

இது சீஷத்துவம் மற்றும் எஜமானர், அவருடைய புத்திரசுவீகாரம், அவரது சிந்தை, அவரது பணி மற்றும் அவரைப் பற்றிய வேத வசனங்களில் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்பதைப் பற்றிய புரிதலைப் பெறுவதைக் குறிக்கும்.

**யோவான் 2:17**

"**...உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது....**" **(KJV)**

"**....என்னை எரித்துவிடும்....**" **(NIV/ISV/LOGOS/WMTH)**

ஓ! இங்கே புரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் அநேகம் இருக்கின்றன!

பின்பு ... நாம் வாசிக்கிறோம்.

## 2) உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிகிறதற்கும்

இந்த 'உயிர்த்தெழுதல்' என்பது மரணத்திலிருந்து கணநேரத்தில் உயிர்த்தெழுவதைக் குறிக்கவில்லை, மாறாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், அதாவது, ஞானஸ்நானமென்பது முதலாம் மரணம் வரையிலான காலப்பகுதிக்குள் நடக்கும் செயல்முறையைக் குறிக்கிறது என்று நாங்கள் அறிவுறுத்துகிறோம்!

இங்குள்ள "**வல்லமை**" என்பது மாபெரும் தெய்வீக கிரியையினைக்


குறிக்கிறது, இது இயேசுவின் விஷயத்தில் – **" ஒரு அனஸ்தாசிஸை "** **(Anastasis)** அல்லது **" எழுப்புதலை "** ஏற்படுத்தியது (ஸ்ட்ராங்க்ஸ் **G # 9386**). அதாவது,

**பரிபூரண "மாம்சீகச்" சுபாவத்திலிருந்து திவ்ய சுபாவம் வரை!**

(ரோமர் 8:11)

மிக உன்னத ஜீவ சுபாவத்துக்கு உயர்த்தப்படும் இந்த மிக உன்னத உயர்வானது... **" அவமானத்தில் "** ஒரு வளர்ச்சியின் செயல்முறையை உள்ளடக்கியிருக்கிறது.

**(எபேசியர் 4:9, 10)**



– இதைப்பற்றி, இப்போதுள்ள **"சரீர "**அங்கத்தினர்களுக்கு எனும்போது, வாசிக்கவும் -- (1 பேதுரு 5:6, யாக்கோபு 4:10)

மேலும், இது யோபு புஸ்தகத்தில், **" புது சிருஷ்டியைக் "** குறிக்கும் **" எலிகூ "** என்னும் கதாபாத்திரத்தின் அடையாளத்திலும் காட்டப்பட்டுள்ளது!

**யோபு 32:2**

**" ....பூசியனாகிய பரகெயேலின் குமாரன் எலிகூ.... "**

இங்கே " **பூசியன்** " என்ற பெயருக்கு **(H#940** ஸ்டராங்ஸ்) " **இகழ்ச்சி** " என்று பொருள் வருகிறது.

ஆமாம்! புது சிருஷ்டியினுடைய வளர்ச்சியின் செயல்முறையாக அவமானத்தின் அனுபவங்கள் உள்ளன என்னும் உட்பொருளையும் கொண்டுள்ளது.

ஆமாம்! இந்த அவமானத்தினுடைய பாதையின் மூலம் இவ்வளவு பெரிதான மகிமைக்கும் மேன்மைக்கும் தேவையான இவ்வளவு பெரிதான தெய்வீக வல்லமையானது நம்மிடம் செயல்படுவதற்கு, நமக்கு நிறைய/அநேக கற்றலும், அறிதலும் தேவைப்படுகிறது !

## 3) பாடுகளின் ஐக்கியத்தை அறிகிறதற்கும்

இது " **கிறிஸ்துவினுடைய உபத்திரவங்கள்** " என்று வேதவசனங்கள் அழைக்கும் அவருடைய பாடுகளுக்கான குறிப்பாகும் **(கொலோசெயர் 1: 24 / 1 பேதுரு 4: 13 / 2 கொரிந்தியர் 1: 7)**

பாவம் மற்றும் " **தீமையினுடைய அனுமதியின்** " காரணமாக மிகுந்த பாடுகளை அனுபவிக்கும் உலகில் ... இந்த

**கிறிஸ்துவினுடைய உபத்திரவங்கள்**

.... கவனமாகப் புரிந்து கொள்ள வேண்டிய, மிகவும் வித்தியாசமான விஷயமாக இது இருக்கிறது !

**கிறிஸ்துவின்** " **தலையான** " இயேசுவிலிருந்து துவங்கி மற்றும்.... பரம தந்தையுடன் பலியினால் உடன்படிக்கைப் பண்ணின " **அவருடைய சரீர அங்கங்களில்** " சுவிசேஷ யுகம் முழுவதும் தொடர்கின்ற கிறிஸ்துவின் இந்தப் **பாடுகள்**

**(இயேசுவுக்கு** → எபிரெயர் 10:7 / லூக்கா 12:50) -லும்

**(சரீரத்திற்கு** → சங்கீதம் 116: 12-14)-லும் வாசிக்கவும்

.....ஆகவே! இது ஒரு மிகவும் விசேஷித்த வகையான பாடுகளை உள்ளடக்கியிருக்கிறது!

இந்த விஷயத்தில் நாம் தற்போது இந்த ஆய்வில் அதிக விவரங்களுக்குள்ளாகச் செல்லாமல், **கொலோசெயர் 1:24** க்கு விளக்கவுரையில் **(EBC)** பக்கம் 504 – ல் சகோ.ரசல் அவர்களின் கருத்துக்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

- "...தங்களின் தலையின் உபத்திரவங்களில் குறைவானதைச் சரீரமாகிய சபை நிறைவேற்றும் வரை, இருதயம் மற்றும் சிந்தையின் அறியாமையும் குருட்டுத்தன்மையுமே கிறிஸ்துவின் எல்லாப் பாடுகளுக்கும் காரணமாக உள்ளன... " **(R5872).**

- "...நம்முடைய உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாய் இருப்பதன் மூலம் நாம் அனுபவிக்கும் பாடுகள். இந்த அனுபவங்கள் ஆதாம் நிமித்தம் உண்டானதல்ல...." **(R5117).**

- " ...பவுல் தன்னிடமோ அல்லது மற்றவர்களிடமோ, **நான் சுவிசேஷ ஊழியத்தில் என் பங்கை விட அதிகமாகச் செய்கிறேன், உங்களில் சிலர் வந்து எனக்கு உதவ வேண்டும்** என்று சொல்வதற்குப் பதிலாக, அவர் வேறொரு பார்வையை எடுத்துக் கொண்டார், முடிந்தவரை கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதைத் தானே நிறைவேற்ற அவர் வாஞ்சையாக இருப்பதாக அவர் அறிவிக்கிறார்...." **(R5951).**

ஆகவே, கிறிஸ்துவுக்கான ஊழியம், வெளிச்சம் மற்றும் சத்தியத்தின் செய்தி சார்பான இந்தப் "**பாடுகளைக்**" கவனமாகக் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒரு விஷயமாகும்.

மேலும், இறுதியாக

## 4) அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நாம் முந்தைய "**அறிதலைப்**" பெறுவதற்கான குறிக்கோள் மற்றும் நோக்கம் இதுதான்!

ஆமாம்! **அவருடைய மரணம்**

தானும் சிலுவையில் மரிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் அர்த்தப்படுத்தவில்லை " **....மாறாக பலியினாலான மரணத்தை அடைய**

**வேண்டும்....**" என்கிறார் (ஹார்வெஸ்ட் க்ளீனிங்ஸ் **- HARVEST GLEANINGS) HG130 / R1542)**

மீண்டும் பக்கம் 489 – இல் சகோ.ரசலின் விளக்கவுரையில் **(EBC)** இரண்டு விளக்கங்களைப் வாசிக்கிறோம்.

- "…..அவருடைய மரணத்திலிருந்து வேறுபட்ட மரணமல்ல, ஆனால் அதற்கொத்தவாறு ஒரு பாவியாக மரணமடையாமல், ஒரு பலியாக மரணமடைவது…. " **(R4680)**

- "….அவரை முழுமையாக அறிந்த மற்றும் அவரது ஆவியில் பானம்பண்ணினவர்களுக்கு மட்டுமே இதுபோன்ற முழுமையான சரணடைதல் சாத்தியமாகும்…." **(R2138)**

எனவே, முடிவாக, அன்பான சகோதர சகோதரிகளே, இந்த அழியாததும், கிறிஸ்துவுக்கென வைக்கப்பட்டிருந்த **(கொலோசெயர் 3:3)**, அழியாமை என்னும் திவ்ய சுபாவம் என்னும் "**ஜீவனைத்**" தருகிற "**மறைவான மன்னாவானது**," சுவிசேஷ யுகத்தினுடைய இந்த இவ்வளவு பெரிதான இரட்சிப்பின் ஆழ்ந்த சத்தியங்கள் மற்றும் வாக்குத்தத்தங்கள் குறித்து தேவனுடைய வார்த்தையிலிருந்து ஒரு அறிவையும் புரிதலையும் பெறுவதாகும்.

இது தகுதியான ஜெயங்கொண்டவர்கள் அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் கர்த்தராகிய இயேசுவால் கொடுக்கப்படுகிறது அல்லது வழங்கப்படுகிறது!

ஜெயங்கொண்ட ஒவ்வொருவரும் எஜமானரும் நிச்சயிக்கப்பட்ட மணவாளனானவரிடமிருந்தும் "**மறைவான மன்னாவைப்**" பெறுவது உண்மையில் எவ்வளவு அற்புதமான ஆசீர்வாதமாகும்!

கீழுள்ள வசனத்தில் இதைக்குறித்துக் காணப்படுகிறது –

**வெளிப்படுத்தல் 3:20**

"**இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.**"

## லூக்கா 12: 36, 37

**“ தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள். எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.”**

இது **ஏழாம் சபையான லவோதிக்கேயாவின் பார்வையில்** இருந்து பார்ப்பதாகும்!

நாம் வாசிக்கும்படி எஜமானர் ஒரு குறிப்பிட்ட முறையைப் பயன்படுத்துகிறார்.

## மத்தேயு 24:45 – 47

**“ ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்? எஜமான் வரும்போது அப்படிச் செய்கிறவனாகக் காணப்படுகிற ஊழியக்காரனே பாக்கியவான். தன் ஆஸ்திகள் எல்லாவற்றின்மேலும் அவனை விசாரணைக்காரனாக வைப்பானென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.”**

ஆமாம்! “ **ஏழாம் தூதன்** ” மற்றும் அவரது எழுத்துக்கள் ஆகியவை இந்த வெளிச்சம் மற்றும் சத்தியத்தைப் பெறுவதற்கான வழிமுறையாகும்!

(அருமையான வாக்குத்தத்தங்கள் – லூக்கா 12:37)

– எனவே மன்னா பற்றிய இந்த ஆய்வினைத் தேவனுடைய வார்த்தையாக நிறைவு செய்கிறோம்.

**இது ஒரு ஆசீர்வாதமாக இருந்திருக்குமென நம்புகிறோம்!**

**மத்தேயு 4: 4 – கின் அருமையான வாக்குத்தத்தங்களைப்** வாசித்து பாடத்தை நிறைவு செய்யலாம்

**“....தேவனுடைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும்...”**

நாம் எப்படிப் பிழைக்கக்கூடும்? இயேசு இங்கு எதைக் குறிப்பிடுகின்றார்? எப்படித் தேவனுடைய வார்த்தை ஜீவனைக் கொடுக்கும்?

"நித்திய ஜீவனை அடைவதற்கான எல்லா நம்பிக்கையும் தேவன் மீது – தெய்வீக திட்டம் மற்றும் அதன் வாக்குத்தத்தங்கள் மீது சார்ந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இந்த வாக்குத்தத்தங்களை நாம் பார்க்கும்போது தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட சகல சிருஷ்டிகளும் அவருடன் இசைந்து காணப்பட்டும், விசுவாசம், அன்பு மற்றும் கீழ்ப்படிதலில் தொடர்ந்து நிலைத்திருந்தால் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள் என்பதே, உலகம் உண்டாவதற்கு முன்னதாகக் காணப்பட்ட தெய்வீகத் திட்டமாகத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகின்றது. இதுவே இக்கருத்தைக் குறித்ததான தேவனுடைய வார்த்தையாக உள்ளது. அதாவது, கீழ்ப்படிதலே நித்திய ஜீவனைப் பெறுவதற்கான நிபந்தனையாக உள்ளது. இந்தக் காரியங்களை உள்ளடக்கியே கர்த்தர் இந்த வார்த்தைகளைச் சொல்லியிருப்பார் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை." **(R4896)**

– மெய்யாகவே, தேவனுடைய வார்த்தையானது, **"ஜீவனும்…"**, **" அப்பமும்…"** **" வானத்திலிருந்து கொடுக்கப்பட்ட மன்னாவுமாகும்,"** இதன் மூலமே

## மனிதன் பிழைப்பான் !

**(கர்த்தர்தாமே அவருடைய பரிசுத்தமான வார்த்தைகளைப் புரிந்துகொள்ள அவருடைய ஆசீர்வாதங்களை வர்த்திக்கப் பண்ணுவாராக, ஆமென்!!)**





See more Books & Articles for new creature at

www.foodfornewcreature.com